Registered as a NewsPaper

விலை ரூபா 7.00

# ஈழநாதம்

EELANATHAM மக்கள் நாளிதழ்

பக்கங்கள்~08

நாதம் 14 திருவள்ளுவர் ஆண்டு 2034 ஆடி -11 27-07-2003 ஞாயிற்றுக்கிழமை ஓசை 159

படச்சுருள்கள் அனைத்தையும் கணினி தொழில் நுட்பத்தில் ஒருமணி நேரத்திற்குள் கழுவிப் பெற்றுக் கொள்ள

பொற்காலம் வண்ணக் கலையகம்

MILLENNIUM COLOUR LAB

Video, Audio & Studio

மேலும் வீடியோ புகைப்பட சேவைகள்,
கணினி முறை வீடியோ மிக்சிங்,
பாடல் பதிவுகள்,
அனைத்திற்கும்

Jaffna Road, Kilinochchi. யாழ் சாலை, (சி-8437) கிளிநொச்சி.

# திருமலை நகரில் நேற்றுப் பூரண கதவடைப்பு;

# போக்குவரத்தும் பாதிப்பு, நகர் வெறிச்சோடியது!

## அமைச்சர் ராஜித சேனாரத்னவின் விஜயம் ரத்து

**திருகோணமலை நகரில் நேற்றுப் பூரண கதவடைப்பு இடம் பெற்றது. இதனால் நகரம் வெறிச்சோடிக்காணப்பட்டது. திருகோண மலை வெகுஜன அமைப்பு ஒன்றியமும், பொங்கு தமிழ் சமூகம் என்ற அமைப்பும் இணைந்து இந்த கதவடைப்பை ஏற்பாடு செய்திருந்தன. இக்கதவடைப்பை முன்னிட்டு வாகனப்போக்குவரத்துப் பாதிக்கப்பட்டிருந்தது. அமைச்சர் ராஜிதசேனாரத்னவின் விஜயம் ரத்துச் செய்யப்பட்டது.**

திருகோணமலை நகர்ப் பகுதியிலும், ஏனைய இடங்களிலும் தமிழ், முஸ்லிம் வர்த்தகர்களின் கடைகள் மூடப்பட்டிருந்தன. பெரும்பான்மை இனத்தவர்களின் ஒரு சில கடைகள் தவிர ஏனைய அனைத்து கடைகளும் மூடப்பட்டிருந்தன.

வீதிகள் அனைத்தும் வெறிச்சோடிக்காணப்பட்டன. பஸ்சேவைகள் பயணிகள் குறைந்த காரணத்தால் மட்டுப்படுத்தப்பட்டதாகக் காணப்பட்டது.

திருமலை குரங்குப்பாஞ்சானில் அமைந்துள்ள தமிழீழ விடுதலைப்புலிகளின் முகாமை அகற்றுமாறு போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரின் தவறான தீர்ப்புக்கு எதிர்ப்புத்தெரிவித்தும் எமது மண்திட்டமிட்ட ரீதியில் அபகரிக்கப்படுவதை எதிர்த்தும் சமாதானச் சூழ்நிலையில் தமிழ் மக்களுக்கு எதிராகமீண்டும் தொடரும் கைதுகள் மற்றும் அநீதிகளை எதிர்த்துமே இக் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

(08.ஆம் பக்கம் பார்க்க)



வெறிச்சோடியுள்ள திருமலை நகரம்

## கொடிகாமம், மீசாலைப் பகுதிகளில்

## படைமுகாமுள்ள காணிகளிலிருந்து தென்னை, பனைமரங்கள் தறிப்பு

கொடிகாமம், மீசாலை, மிருசுவில் இராணுவ முகாங்களால் உள்வாங்கப்பட்டிருக்கும் பொதுமக்களின் காணிகளிலிருந்து தினமும் தென்னை மரங்கள் பனை மரங்கள் என்பன தறிக்கப்பட்டு வருவதாகத் தெரியவருகிறது. இவ்வாறு இராணுவத்தினரால் தறிக்கப்படும் மரக்குற்றிகள் இரவோடு இரவாக இராணுவத்துருப்புக்காவிகள் மூலம் சாவகச்சேரி, கிளாலிப் பகுதிகளுக்கு எடுத்

(08.ஆம் பக்கம் பார்க்க)

## கிளாலி கடற்படை முகாமிலிருந்து

## தப்பியோடி பொதுமக்களிடம் சரணடைந்த கடற்படைச் சிப்பாய்

(யாழ்ப்பாணம்)

யாழ்.கிளாலி கடற்படை முகாமிலிருந்து தப்பியோடி பொதுமக்களிடம் சரணடைந்த கடற்படைச் சிப்பாய் ஒருவர் தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல் துறையினிடம் ஒப்படைக்கப்பட்டார்.

அனுராதபுரத்திலுள்ள காடகாற்கிலிய என்ற இடத்தைச் சேர்ந்த சோமலதாகோ சிறிலால் ராஜபக்ஷ என்ற இந்தக் கடற்படைச் சிப்பாய் நேற்று முன்தினம் இரவு கிளாலி கடற்படைத்தளத்தில் இருந்து தப்பியோடி பொதுமக்களிடம் சாவகச்சேரிப் பகுதியில் தஞ்சமடைந்து விடுதலைப் புலிகளிடம் சரணடைய விரும்புவதாகக் கூறியுள்ளார்.

இதனையடுத்து சாவகச்சேரியிலுள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறையினிடம் பொதுமக்களால் இச்சிப்பாய் ஒப்படைக்கப்பட்டார்.

வறிய குடும்பத்தைச் சேர்ந்த இச்சிப்பாய் வறுமையின் நிமிர்த்தம் கடற்படையில் இணைந்திருந்த

(08.ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பு செங்கலடியில் இரு போராளிகள் பொலிசாரால் கைது

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் இரு விடுதலைப் புலிகள் சென்ற வாகனத்தின் ஆவணங்கள் தொடர்பான பிரச்சினை காரணமாக இருவரையும் சிறிலங்காப் பொலிசார் கைது செய்துள்ளனர்.

விடுதலைப் புலிகள் பயணம் செய்த வாகனம் மட்டக்களப்பு-வாழைச்சேனை வீதியில் செங்கலடி பொலிஸ் நிலையம் முன்பாக மறிக்கப்பட்டு வாகன ஆவணங்கள் கோரப்பட்டு அவை இல்லாததால் இரு விடுதலைப் புலிகளும் கைது

(08ஆம் பக்கம் பார்க்க)

## தம் கோரிக்கைகளை நிறைவேற்றக் கோரி

## யாழ். பல்கலை பேரவை உறுப்பினர்களை மண்டபத்தில் பூட்டிவைத்த மாணவர்கள்

(யாழ்ப்பாணம்)

தம் கோரிக்கையை நிறைவேற்றுமாறு கோரி யாழ். பல்கலைக் கழகத் துணைவேந்தர் உட்பட பல்கலைக்கழகப் பேரவை உறுப்பினர்களை, பேரவைக் கூட்டம் முடிந்தும் வெளியே வரமுடியாதவாறு கூட்டம் நடந்த கேட்போர் கூடத்தினுள் யாழ். சித்த மருத்துவத்துறை மாணவர்கள் பூட்டி வைத்துள்ளார்கள்.

நேற்று யாழ். பல்கலைக்கழக நிர்வாகக் கட்டமைப்புத் தொடர்பாக ஆராயப்படும் கூட்டம் இடம்பெற்றது. இவ்வேளை சித்த மருத்துவத்துறை மாணவர்கள் சித்த மருத்துவத்துறையை நிறுவன மயப்படுத்தாது தனிப்பீடமாக்குமாறு கோரிக்கை ஒன்றை முன்வைத்தார்கள். இப் பேரவைக் கூட்டம் முடிந்த பின்பும் சாதகமான பதில் எதுவும் கிடைக்காத நிலையில் ஆத்திரமடைந்த மாணவர்கள், இக் கேட்போர் கூடத்தைச் சூழவுள்ள சகல வாயில் கதவுகளையும் அடைத்து மதியம் 12 மணி முதல் மாலை 5 மணி வரையும் துணைவேந்தர் உட்பட்ட பேரவை உறுப்பினர் அனைவரையும் அடைத்து வைத்தார்கள். இதன் போது சில மாணவர்கள் கட்டடத்தின் உள்நுழைந்து தமது கோரிக்கையை பேரவைக் குழுவினருக்கு விளக்கிக் கூறினார்கள். இதன் பின்னர் சித்த மருத்துவத்துறையைத் தனியார் மயப்படுத்துவதை நிராகரிப்போம் என்றும் இத்துறையின் வளர்ச்சிக்காக ஏழுபேர் கொண்ட குழு ஒன்றை அமைப்பது என்றும்

(08.ஆம் பக்கம் பார்க்க)

## "புலத்திலிருந்து ஒரு தமிழீழக்குயில்" சிறப்புற நடந்த இசைத்தட்டு வெளியீடு

(அலுவலக செய்தியாளர்)

செல்வி அர்ச்சனா ஆனந்தகரன் பாடிய பாடல்கள் அடங்கிய இசைத்தட்டு "புலத்திலிருந்து ஒரு தமிழீழக்குயில்" நேற்று முல்லை மாவட்டத்தில் செஞ்சோலையில் சிறப்பாக வெளியிட்டு வைக்கப்பட்டுள்ளது. தமிழீழ அரசியல்துறைத் துணைப் பொறுப்பாளர் சோ. தங்கன் இதனை வெளியிட்டுவைத்தார் நாயகத்திலிருந்து புலம் பெயர்ந்து சென்று நோர்வே நாட்டில் வசித்துவரும் செல்வி. அர்ச்சனா நோர்வேயில் வைத்து

(08.ஆம் பக்கம் பார்க்க)



புலத்திலிருந்து ஒரு தமிழீழக் குயில் இசைத்தட்டு வெளியிட்டு வைக்கப்படுவதையும், செல்வி அர்ச்சனா ஆனந்தகரனுக்கு செஞ்சோலை மாணவிகள் நினைவுப் பரிசில் வழங்குவதையும் மேலுள்ள படங்களில் காணலாம்.

## உருத்திரபுரம் கூழாவடியில்

## விமானத் தாக்குதலில் பலியான மக்கள் நினைவாக தூபி திறப்பு

(அலுவலக செய்தியாளர்)

சிறிலங்கா இராணுவத்தினர் கிளிநொச்சிப் பிரதேசத்தில் 04.02.1991 ஆம் ஆண்டு அன்று பொதுமக்கள் மீது மேற்கொண்ட கிலேச்சத்தனமான வான் தாக்குதலினால் உருத்திரபுரம் கூழாவடியில் அநியாயமாகக் கொல்லப்பட்ட ஒன்பது பொதுமக்களின் நினைவாக நாளை பி.ப. 3.00 மணிக்கு கூழாவடிச் சந்தியில் ஒன்பது நினைவுத் தூபிகள் திரைநீக்கம் செய்து வைக்கப்படவுள்ளன.

உருத்திரபுரம் தேசிய எழுச்சிப் பேரவை மற்றும் உருத்திரபுரம் பிரதேச அரசியல்துறையினர் இணைந்து மேற்படி நினைவுத்தூபியினை அமைத்துள்ளனர். திரைநீக்க நிகழ்வினைத் தொடர்ந்து நினைவுக் கருத்துரைகள், இசை, கலை நிகழ்வுகள் என்பன இடம்பெற ஏற்பாடாகியுள்ளது. மேற்படி ஒன்பது பொதுமக்க

(08ஆம் பக்கம் பார்க்க)

வரி விளம்பரம்

### ஆடி அமாவாசை தீர்த்த உற்சவம்

புதுமுறிப்பு கற்பக விநாயகர் ஆலயத்தில் வழமைபோல ஆடி அமாவாசை தீர்த்த உற்சவம் 28.07.2003 திங்கட்கிழமை காலை 8.மணிக்கு நடைபெறும் பிதிர்க்கடன் செய்வதற்கு உரிய ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளது.

ஆலய பரிபாலனசபை. (3569)


## விபத்தில் காயம்

பூநகரி-மன்னார் வீதியில் கடந்த வியாழனன்று இரு உந்துருளிகள் மோதி விபத்து ஏற்பட்டதில் ஒருவர் காயமடைந்தார். காயமடைந்த உமாமகேஸ்வரன் என்பவர் மேலதிக சிகிச்சைக்காக முழங்காவில் அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (34)

# கால்நடை வளர்ப்போருக்கு உதவும் வகையில் கிராம ரீதியாக நடமாடும் சேவை

## பதிவு செய்து பயனைப் பெறலாம்

(ஒட்டுசுட்டான்)

கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களமும் முல்லை. மாவட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனமும் இணைந்து கால்நடைகள் வளர்ப்போருக்கு உதவும் வகையில் நடமாடும் சேவையை மேற்கொண்டு வருகின்றன.

கால்நடை வளர்ப்போர் தங்கள் கால்நடைகளுக்கு தடுப்பூசி, செயற்கைமுறையில் சினைப்படுத்தல், நலமடித்தல், கர்ப்ப பரிசோதனை என்பவற்றுக்கான சேவைகளைப் பெறுவதுடன் கால்நடை அபிவிருத்தி தொடர்பான பயிற்சிகளையும் பெற்றுக்கொள்ளலாம்.

இச்சேவை கிராம ரீதியாக 19.08.03 வரை நடைபெறும் ஆகையால் கால்நடை அபிவிருத்தி சுகாதார திணைக்களங்களிலும் முல்லை. மாவட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன பிரதேச செயலகங்களிலும் தங்கள் பதிவுகளை உடனடியாகச் செய்யுமாறு முல்லை மாவட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனமும் கால்நடை அபிவிருத்தி சுகாதாரத் திணைக்களமும் கேட்டுக்கொள்கின்றது.

## பொது மண்டபம் அமைப்பு

வன்னி கெயர் நிறுவனத்தின் நிதி உதவியுடனும் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் அனுசரணையுடனும் பூநகரி, முழங்காவில் அபிவிருத்தி புனர்வாழ்வுக் கழகத்தால் கிராஞ்சியிலும் வலைப்பாட்டிலும் பொது மண்டபம் அமைக்கும் செயற்பாடு நடைபெற்று வருகின்றது. கிராஞ்சியில் வேலை பூர்த்தியாகும் நிலையில் உள்ளது. இதனால் பொது நிகழ்வுகள் நடைபெறுவதற்கு வசதியாக இருக்கும் என்று மக்கள் மகிழ்ச்சியைத் தெரிவித்திருக்கின்றனர். (34)

# வவுனியா மாவட்டத்தில் கால் நடைப்பயிற்சி வகுப்பு

வவுனியா மாவட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனமும் கால் நடை சுகாதாரத்திணைக்களமும் இணைந்து கால்நடை பயிற்சி வகுப்புக்களை நடத்தியதோடு இலவசமாக கோழிக்குஞ்சுகளையும் வழங்கியுள்ளன.

வவுனியா மாவட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன வவுனியா மாவட்டச் செயலகத்தில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு மாவட்ட இணைப்பாளர் ம.சோதி தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் வவுனியா மாவட்டகால்நடை வைத்தியராலும் கால் நடைபோதனாசிரியராலும் கோழிவளர்ப்பில் ஏற்படும் பிரச்சினைகள், நோய்கள், தடுப்பூசி ஏற்றல் போன்ற பயிற்சிகள் வழங்கப்பட்டன.

பயிற்சி முடிவில் 10 பயனாளிகளுக்கு ஒருமாத வயதுடைய கோழிக்குஞ்சுகள் இலவசமாக வழங்கப்பட்டன. இந்நிகழ்வில் 35இற்கு மேற்பட்ட கால்நடைவளர்ப்போர் கலந்து கொண்டனர். (பா)

# கால்நடை பராமரிப்புக் குறித்து துணுக்காய் பகுதியில் இடம்பெயர்சேவை

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் முல்லை மாவட்டச் செயலகமும், துணுக்காய் கால் நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களமும் இணைந்து நடாத்தும் இடம்பெயர் சேவை வரும் ஆகஸ்ட் மாதம் பின்வரும் ஒழுங்கிற்கமைய மேற்கொள்ளப்படவிருப்பதால்,கால்நடை வளர்ப்போர் இதில் கலந்துகொண்டுபயன்பெறுமாறு கேட்கப்பட்டுள்ளது.06.08.2003 துணுக்காய் நியாப்மண்டபத்தில், 07ஆம் திகதி ஐயன்கன்குளம் பாடசாலை அருகாமை,08ஆம் திகதி கோட்டைகட்டி நியாப் மண்டபம், 11ஆம் திகதி மல்லாவி கால்நடை வைத்தியர் பணிமனை, 12ஆம் திகதி 20 யுனிற் சனசமூக நிலையம், 13ஆம் திகதி பாண்டியன்குளம் கமநல சேவை நிலையம், 14ஆம் திகதி ஒட்டன்குளம் கிராமசேவையாளர் அலுவலகம்,15ஆம் திகதி பனங்காமம் பாடசாலை அருகாமை, 16ஆம் திகதி கல்விளான்குளம் கிராம அபி விருத்திச் சங்க கட்டடம். (26)

## சின்னமுத்து தடுப்பூசி ஏற்றல்

கடந்த புதனன்று 10 வயதிற்கும் 15வயதிற்கும் இடைப்பட்ட பூநகரி ம.வி. மாணவர்கள் 33 பேருக்கும் சிறிவிக்கினேஸ்வரா மாணவர்கள் 42 பேருக்கும் சின்ன முத்து தடுப்பூசி வழங்கப்பட்டது. (34)

# இனிய வாழ்வு இல்லத்தில் சிறார்களுக்கு விடுதி திறப்பு

(அலுவலக செய்தியாளர்)

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினால் நடத்தப்பட்டுவரும் இனிய வாழ்வு இல்லத்தில் பயனாளிகள் தங்குவதற்கான விடுதி ஒன்று லண்டன் சிறி கனகதுர்க்கையம்மன் ஆலய நிதி உதவியுடன் அண்மையில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இனியவாழ்வு இல்லத்தில் வசித்து பயன் பெற்றுவரும் செவிப்புல வலுவிழந்த ஆண் சிறார்களுக்காக அமைக்கப்பட்ட விடுதியே திறந்து வைக்கப்பட்டுள்ளது.

நிகழ்வில் மங்கலவிளக்கினை தமிழர் புனர்வாழ்வுக் கழக நிறைவேற்றுப்பணிப்பாளர் கே.பி.றெஜி ஏற்றிவைத்தார். தமிழீழ தேசியக் கொடியை வள்ளிபுனம் வலயப் பொறுப்பாளர் மயூரன் ஏற்றிவைத்தார். விடுதியின் பெயர்ப் பலகையை புனர் வாழ்வுக்கழக நிறைவேற்றுப் பணிப்பாளர் கே.பி.றெஜி திரைநீக்கம் செய்து வைத்தார். திருமதி வாகீசன் விடுதிக்கான நாடாவை வெட்டித் திறந்து வைத்தார். (லோ)

# கிருமி நாசினி தெளித்தவர் பரிதாபகரமாக மரணம்

## மற்றொருவர் மருத்துவமனையில்

வட்டக்கச்சிப் பகுதியில் தற்போது சிறுபோக பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்ட இவ்வேளையில் பயிர் நிலங்களுக்கு கிருமிநாசினி தெளித்த நபர் ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்தார். வேறு ஒரு நபர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவருகின்றார்.

மேற்படி சம்பவத்தில் மாயவனூரைச் சேர்ந்த மணியம் என்பவரே கிருமிநாசினி தெளித்த போது அதன் நஞ்சுத்தன்மை உடலில் பரவி உயிரிழந்துள்ளார். அவசர சிகிச்சைக்காக கிளிநொச்சி மாவட்ட அரசினர் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு கடந்த திங்களன்று கொண்டு செல்லப்பட்டு உயிரிழந்துள்ளார். மற்றொருநபரான வட்டக்கச்சியைச் சேர்ந்த விமலச்சந்திரன் (வயது-32) என்பவரும் கிருமிநாசினி தெளித்த போது நஞ்சுத்தன்மை உடலில்பரவி மயக்கமடைந்த நிலையில் கிளிநொச்சி மாவட்ட அரசினர் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு சிகிச்சை பெறுகின்றார். இச்சம்பவம் கடந்த செவ்வாயன்று நடைபெற்றுள்ளது.

கிருமிநாசினி தெளிக்கும் போது தகுந்த முறையில பாதுகாபபு முறைகளை மேற்கொள்ளப்படாமையினாலேயே இழப்புக்கள் நேரிடுகின்றது. அவசியமாக கிருமிநாசினி தெளிக்கும்போது கையுறை, சுவாச உறை, உடல் கவசம் அணியாததுடன் தெளித்த பின் சவர்க்காரம் கொண்டு கழுவாமை போன்ற பல காரணங்களினாலேயே இழப்புக்களைச் சந்திக்க நேரிடுகின்றது என சம்பந்தப்பட்டோர் தெரிவிக்கின்றனர். (12)

## மாதாந்த சந்திப்பு

பூநகரி எழுச்சிப் பேரவையின் மாதாந்த சந்திப்பு ஆலங்கேணி கந்தன் முன்பள்ளியில் காலை 9.00 மணிக்கு தே.எ.பே. தலைவர் தலைமையில் நடைபெறும் என்பதை பூநகரி பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் தெரிவித்துள்ளார்.(34)

# உந்துருளி மோதியதில் மாணவி ஒருவர் படுகாயம்

வட்டக்கச்சி இராமநாதபுரம் கிழக்கு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை அருகில் உந்துருளி மோதியதில் வேலாயுதம்பிள்ளை சுகீர்தா (வயது-14) என்ற மாணவி படுகாயமடைந்துள்ளார்.

மேற்படி சம்பவமானது நேற்றுமுன்தினம் மாலை 04.30 மணியளவில் நடைபெற்றுள்ளது. வீதியில் நடந்து சென்ற மாணவி மீது உந்துருளி மோதியதில் அவர் படுகாயங்களுக்குள்ளாகிய நிலையில் அவசர சிகிச்சைக்காக கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக உடன் யாழ் போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார். இது தொடர்பாக விசாரணைகளை காவல்துறையினர் மேற்கொண்டு வருகின்றனர். (12)

## புதுக்குடியிருப்புப் பகுதியில்

# தவறாக இயக்கப்பட்டதால் சாரதி மீது உழவு இயந்திரம் ஏறியது

(ஒட்டுசுட்டான்)

உழவு இயந்திரம் ஏறி உழவு இயந்திரச் சாரதி புதுக்குடியிருப்பு மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் இரவு 7.30 மணியளவில் இடம்பெற்றது. தனது வீட்டுக்கு மண்ணினை பறித்துக்கொண்டிருந்தவேளை தவறுதலாக 'கியர்' போடப்பட்டுள்ளதால் இவர் மீது உழவு இயந்திரம் ஏறியுள்ளது. வித்தியாபுரம் ஒட்டுசுட்டானைச் சேர்ந்த தியாகராசா (வயது-55) என்பவரே இச்சம்பவத்தில் பாதிக்கப்பட்டுள்ளார். (05)

# அமைச்சர் ஜெயலத்தின் மகன் பொலிஸார் மீது தாக்குதல்

அமைச்சர் ஜெயலத்ஜெயவர்த்தனாவின் மகன் கடந்த 24ஆம் திகதி இரவு பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரை தாக்கிய சம்பவம் பற்றி தெரியவந்துள்ளது.

அமைச்சுக்கு சொந்தமான வாகனம் ஒன்றில் வந்த அவரும் அவரது நண்பர்களும் பிரபல பெண்கள் கல்லூரி ஒன்றிற்கருகில் சுவரில் தகாத வாசகங்களை எழுதிக்கொண்டிருந்த வேளை அங்கு கடமையிலிருந்த பொலிஸ் உத்தியோகத்தர் அதனைத் தடுக்க முயன்றுள்ளார். அவ்வேளையில் தம்மை ஜெயலத் ஜெயவர்த்தனாவின் மகன் எம்மை ஒன்றும் செய்ய முடியாது என்று கூறிக்கொண்டு தாக்கினார். இவ்வேளையில் அவரது நண்பர்கள் எனக்கூறுபவர்களும் தன்னைத் தாக்கியதாகவும் தான் மேலும் தாக்கப்படுவதைத் தடுக்க கைத்துப்பாக்கியால் மேல் நோக்கிச் சுட்ட தாகவும் பின்னர் அவர்கள் வாகனத்தில் ஏறி ஓடி விட்டனர். எனவும் தாக்கப்பட்ட பொலிஸார் தெரிவித்துள்ளார்.

# கட்டாக்காலி கால்நடைகளால் வீதிவிபத்துக்கள் அதிகரிப்பு

புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் கட்டாக்காலியாக இரவில் வீதிகளில் கிடக்கும் ஆடு மாடுகள் போக்குவரத்திற்கு இடையூறாக இருப்பதுடன் விபத்துக்கும் காரணமாகின்றன. இதன்காரணமாக கால்நடை வளர்ப்போர் தமது ஆடு, மாடுகளை இரவு வேளைகளில் கட்டியோ அல்லது பட்டியில் அடைத்தோ வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். தவறும் பட்சத்தில் நாளை திங்கட்கிழமை மாலை 6.00 மணியில் இருந்து இவை பிடிக்கப்பட்டு தண்டப் பணமும் அறவிடப்படும் என முல்லை மாவட்ட பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் அறிவித்துள்ளது. (05)

# தச்சடம்பன் பாடசாலையில் மாதாந்த வீரமுரசு நிகழ்வு

மாங்குளம் பிரதேசத்தில் தச்சடம்பன் பெரிய புளியங்குளம் பாடசாலையில் மாதாந்த வீரமுரசு நிகழ்வு நடைபெற்றது. நேற்றுமுன்தினம் இரவு 7.30 மணியளவில் பாடசாலையின் ஆசிரியை தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பொதுச் சுடரினை தச்சடம்பன் கிராம சேவகர் சி.சிதம்பரநாதனும் பெரிய புளியங்குள கோவில் பூசகரும் ஏற்றினர்.

தொடர்ந்து புதுவை அன்பனின் கரைதேடும் ஓடங்கள் என்ற நாடகமும், வில்லிசை, நடனம், பாட்டு போன்ற கலைநிகழ்வுகளும் நடைபெற்றன. இதில் சிறப்புக் கருத்துரையினை முல்லைமாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் செ.முகுந்தன் ஆற்றினார். (05)

# முல்லை. நலன்புரிச் சங்கத்தால் வியாபாரக் கடன் வழங்கல்

கெயர் நிறுவனத்தின் வன்னி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் முல்லை. மக்கள் நலன்புரிச் சங்கத்தினால் இம் மாதம் அளம்பில் பகுதியில் 28 பயனாளிகளுக்கு வியாபாரக்கடன் வழங்கப்பட்டுள்ளது.

சுயப்பகுதி வியாபாரிகளின் வியாபார மேம்பாட்டுக்கா 4 இலட்சத்தி 90 ஆயிரம் ரூபா நிதி, 28 பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. தொடர்ந்தும் பயனாளிகளுக்கான கடனுதவிகள் வழங்கப்படவுள்ளதாகவும் முல்லை. மக்கள் நலன்புரிச் சங்க இணைப்பாளர் செ.நகுலசீலன் தெரிவித்துள்ளார். (ஆ)

# பூநகரியில் கண்சிகிச்சை

தியாக தீபம் நடமாடும் மருத்துவ சேவைப் பிரிவினரால் பூநகரி தியாக தீபம் திலீபன் மருத்துவமனை மருத்துவர் நளாவின் ஏற்பாட்டில் கடந்த புதன்கிழமை நல்லூரிலும் 4ஆம் கட்டையிலும் மாணவர்களிற்கு கண் சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. இச்சிகிச்சையில் பூநகரி ம.வி, சிறீவிக்கினேஸ்வரா வித்தியாலயம் நல்லூர் ம.வி, செல்லையாதீவு அ.த.க.பாடசாலையைச் சேர்ந்த 106 மாணவருக்கு சிகிச்சை செய்யப்பட்டு 8 மாணவருக்கு கண்ணாடி பெற்றுக் கொடுப்பதற்கான ஏற்பாடும் செய்யப்பட்டுள்ளது. (34)

# நாகமுனை அணைக்கட்டை கட்டுவதற்கு நடவடிக்கை

வலைப்பாடு, பொன்னாவெளிக் கிராமங்களிற்கு இடையேயான நாகமுனை அணைக்கட்டு சீரற்று இருப்பதால் கடல் நீர் உள்ளே புகுந்து கிராம மக்களிற்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இவ்வணைக்கட்டைக் கட்டுவதற்கு கெயர் நிறுவனம் சம்மதம் தெரிவித்துள்ளது. வெகுவிரைவில் வேலை ஆரம்பிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இதன் மூலம் பல நூற்றுக்கணக்கான மக்கள் நன்மை அடைவர் என்பது குறிப்பிடத்தக்கது. (34)

# உள்ளூராட்சி வாரத்தையொட்டி தடுப்பூசி மருந்து வழங்கல்

உள்ளூராட்சி வாரத்தையொட்டி வவுனியா வடக்கு பிரதேச சபையும் வவுனியா வடக்கு சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகமும் இணைந்து உணவு கையாளும் நிலையங்களில் கடமையாற்றும் ஊழியர்களுக்கு நெருப்புக் காய்ச்சல் தடுப்பூசி மருந்தேற்றலும், குடற் புழுக்களுக்கெதிரான தடுப்பூசி மருந்தும் நெடுங்கேணியிலும், கனகராயன்குளத்திலும் வழங்கியுள்ளனர்.

# ஜப்பானின் வட-கிழக்கே நிலநடுக்கம் நூற்றுக்கணக்கானோர் காயமடைவு!

## - பலரைக் காணவில்லை

(டோக்கியோ)

ஜப்பானின் வட-கிழக்குப் பகுதியில் நேற்றுக் காலை ஏற்பட்ட பாரிய நிலநடுக்கத்தில் நூற்றுக்கணக்கானோர் காயமடைந்துள்ளதுடன் பலர் மண் சரிவுகளில் சிக்கியுள்ளனர்.

இது றிட்டர் அளவு கோளில் 6.02 என பதிவாகியுள்ளது. இதனால் ஏற்பட்டுள்ள நிலச்சரிவில் சில வீடுகள் சேதமடைந்துள்ளதுடன், சுமார் 1 லட்சத்து 30 ஆயிரம் வீடுகளுக்கு மின் விநியோகம் தடைப்பட்டுள்ளதாகவும் ரயில் போக்குவரத்தும் நிறுத்தப்பட்டதாக ஜப்பானிய தொலைக்காட்சி செய்தி வெளியிட்டுள்ளது.

இதற்கு சில மணித்தியாலங்களுக்கு முன்னர் இன்னுமோர் நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளதாகவும். இது றிட்டர் அளவு கோலில் 5.05 என பதிவாகியுள்ளதாகவும் இத்தொலைக்காட்சி மேலும் தெரிவித்துள்ளது.



லைபீரியாவில் இடம்பெயர்ந்த லைபீரிய குழந்தையொன்று மொன்ரோவியா விளையாட்டு மைதானத்தில் அமைந்துள்ள அகதிமுகாமில் உணவை உண்கின்றது.

## இந்தியாவின் அறிவிப்பு

(புதுடில்லி)

காஷ்மீரில் பயங்கரவாதிகளின் ஊடுருவலை பாகிஸ்தான் உடனடியாக நிறுத்தாவிட்டால் அந்நாட்டுடன் பேச்சுவார்த்தை நடத்த முடியாதென இந்திய வெளியுறவு அமைச்சர் ஜஸ்வந்த் சின்ஹா கூறியுள்ளார்.

உறவுகளைச் சீர்குலைக்கும் வகையில் காஷ்மீரில் பாகிஸ்தான் தீவிரவாதிகள் மீண்டும் தாக்குதல் நடாத்தத் தொடங்கியுள்ளனர் என்றும் அவர் கூறினார்.

# சமாதான முயற்சிகள் முன்னெடுக்கப்படும்; இஸ்ரேலியப் பிரதமர் உறுதிபட அறிவிப்பு

## - மேற்குக்கரை நகரங்களிலிருந்தும் படை விலகும்

மேற்குக்கரை நகரான ஜெனினுக்கு அண்மையில் இஸ்ரேலிய இராணுவத்தினரின் தாக்குதலில் பலியான 5 வயது குழந்தையின் உடலைத் தூக்கிச் செல்லும் பலஸ்தீனர். தவறுதலான துப்பாக்கிச் சூட்டினாலேயே இது நிகழ்ந்ததாக இராணுவம் கூறுகிறது.



**அமெரிக்கா ஆதரவிலான மத்திய கிழக்கு சமாதானத் திட்டத்தை அமுல் செய்வது குறித்து பலஸ்தீன அதிகார சபையுடன் பேச்சு வார்த்தைகளை முன்னெடுத்துச் செல்ல இஸ்ரேல் திட்டமிட்டுள்ளதென பிரதமர் ஏரியல் ஷரோன் அலுவலகம் விடுத்துள்ள அறிக்கை யொன்றில் கூறப்பட்டுள்ளது.**

கடந்த ஜூலை 04ஆம் திகதி மத்திய கிழக்கு சம்பந்தமாக நடாத்தப்பட்ட உச்சி மாநாட்டில் இச்சமாதானத் திட்டம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது தெரிந்ததே.

இதேவேளை, இஸ்ரேல் இரண்டு மேற்குக்கரை நகரங்களில் இருந்து தனது படைகளை திருப்பி அழைக்க உறுதியளித்துள்ளது.

பலஸ்தீனப் பிரதமர் முகமட் அபாஸ் வெள்ளை மாளிகைக்கு மேற்கொண்ட விஜயத்தை அடுத்து இஸ்ரேல் படைகளை திருப்பி அழைப்பது என்ற முடிவை எடுத்துள்ளது.

பிரதமர் ஏரியல் ஷரோனின் அலுவலகம் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் அமெரிக்க ஆதரவிலான சமாதானத் திட்டத்தை முன்னெடுப்பது தொடர்பாக பலஸ்தீன அதிகார சபையுடன் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்க இஸ்ரேல் திட்டமிட்டுள்ளது என குறிப்பிடப்பட்டுள்ளது.

அபாஸும் புஷ்சும் ஊடகவியாளர் மாநாட்டில் உரையாற்றியபோது இஸ்ரேலின் இவ் அறிவித்தலைவரவேற்றுள்ளனர்.

எனினும், பலஸ்தீன அமைச்சர் ஒருவர் இதுவொரு ஏமாற்றும் நடவடிக்கையென வர்ணித்துள்ளார்.

இதனிடையே ஏரியல் ஷரோன் புஷ்ஷை வெள்ளை மாளிகையில் எதிர்வரும் செவ்வாய்கிழமை சந்திக்கவுள்ளார்.

இஸ்ரேலினால் ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளில் யூதக் குடியேற்றங்கள் அமைப்பதற்கு அமெரிக்கா அதன் எதிர்ப்பை மீண்டும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அமெரிக்க எல்லையருகே பெண்களின் சடலங்கள் மீட்பு!

மெக்ஸிக்கோ நாட்டின் யுரஸ் நகரத்தில் மர்மமான முறையில் இறந்துபோன 03 இளம் பெண்களின் சடலங்களை அந்நாட்டுக் காவல் துறையினர் கண்டு பிடித்துள்ளனர்.

இந்நாட்டின் அமெரிக்க எல்லைக்கு அருகேயமைந்துள்ள யுரஸ் நகரத்தில் கடந்த ஒரு வாரத்திற்கு முன்பு காணாமல் போனதாக தேடப்பட்டு வந்த 03 இளம் பெண்கள் மர்மமான முறையில் இறந்து கிடந்ததை அந்நாட்டுக் காவல் துறையினர் கண்டு பிடித்துள்ளனர்.

போதைப் பொருள் கடத்தல், பாலியல்வன்முறை என்பவற்றால் இவர்கள் கொல்லப்பட்டிருக்கலாம் என காவல் துறை கூறுகின்றது.

கடந்த 10 ஆண்டுகளில் இது போல 250ற்கும் அதிகமான பெண்கள் கொல்லப்பட்டுள்ளதாக மேலும் காவல்துறை கூறியுள்ளது.



உதிரிப்பாக விற்பனை நிலையம் கொள்ளை தொடர்பாக கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர்களை காவல் காக்கும் ஈராக்கியப் பொலிசார்.

# காரை படகாக மாற்றி அமெரிக்காவினுள் நுழையும் குடியேறிகள் முயற்சி முறியடிப்பு!

கியூபா நாட்டைச் சேர்ந்த 12 பேர் பழுங்கால கார் ஒன்றினை படகாக மாற்றி அமெரிக்காவினுள் சட்ட விரோதமாக நுழைய முயன்றுள்ளனர்.

இந்த முயற்சியை முறியடித்துள்ள அமெரிக்கக் கடலோர காவல் படையினர் அவர்களை மீண்டும் கியூபாவிற்கு அனுப்பி வைத்துள்ளனர்.

மத்திய அமெரிக்க தீவு நாடான கியூபாவிலிருந்து அமெரிக்காவிற்கு சட்டவிரோதமாக குடியேறுவோர், இரு நாடுகளுக்குமே பெரும் தலைவலியாக உருவெடுத்து வருகின்றனர்.

இந்த நிலையில் தான், கியூபா நாட்டினர் 12 பேர் அமெரிக்காவினுள் ஊடுருவும் ஒரு முயற்சியை கடந்த வியாழன்று மேற்கொண்டனர்.

சுமார் 50 ஆண்டுகளுக்கு முந்தைய கார் ஒன்றினை படகாக மாற்றிய இவர்கள் இதில் 55 கலன் கொள்ளவுள்ள வெற்றுப்பீப்பாக்களை இணைத்து புளோரிடா கடற்கரையைச் சென்றடைய இருந்தபோது, அமெரிக்க கடலோர காவல் படையினரால் வழி மறிக்கப்பட்டனர்.

மணிக்கு 8 கிலோ மீற்றர் வேகத்தில் சென்று கொண்டிருந்த இவர்களை இடை மறித்த கடலோர காவல் படையினர் திருப்பவும் கியூபாவிற்கே திருப்பி அனுப்பிவிட்டனர்.



குவட்டமாலா நகரில் முன்னாள் சர்வாதிகாரியான எப்ரேன் ரையஸ் ஆதரவாளர் ஒருவர் முகமூடி அணிந்தவாறு எரியும் ரயருக்கு எண்ணெய் ஊற்றுகிறார்.

## நீதிமன்றில் மனு!

அரசுத்துறை எண்ணெய் நிறுவனங்களான இந்துஸ்தான், பெற்றோலிய நிறுவனம், பாரத் எண்ணெய் நிறுவனம் ஆகியவற்றைத் தனியார் மயமாக்கும் மத்திய அரசின் முடிவை எதிர்த்து இந்திய உச்ச நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இதனையடுத்து மத்திய அரசுக்கு நோட்டிஸ் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

கம்போடிய தலைநகர் நோம்பென் நகரில் இளவரசர் நொரடம் ரணரிட்சின் ஆதரவாளர்கள் சுதந்திரச் சின்னத்தைக் கடந்து கூக்குரலிட்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுகின்றனர்.



# விளையாட்டு அரங்கு

-ஜெயந்திரன்

# "கிரிக்கெட் உலகைக் கலக்கும் இந்தியச் சொத்துக்கள்"

அன்று முதல் இன்றுவரை இங்கிலாந்து கவுண்டி அணிகள் இந்திய வீரர்களை கவர்ந்திழுக்க போட்டியிடுவது வழக்கம். இதில் இந்தியாவை பூர்வீகக் குடியாகக் கொண்ட வீரர்கள் தேசிய அணியில் இடம் பிடித்து பெரும் வளர்ச்சி கண்டு வருவது அதில் சிறப்பம்சம்.

உலகக் கிரிக்கெட் அணிகளில் இன்று திறமைவாய்ந்த பல்வேறு நாட்டு வீரர்கள் அங்கம் வகிக்கின்ற போதும் இந்திய வீரர்களின் ஆதிக்கமே மேலோங்கியுள்ளது.

இவர்களின் ஆதிக்கம் மேற்கிந்தியத்தீவு அணியில் கூடுதலாக உள்ளதை காணக் கூடியதாகவுள்ளது. அவர்கள் அணி இக்கட்டான நிலையில் இருக்கும்போது கைகொடுப்பவர்களாகத் திகழ்கின்றனர். இது இவ்வாறிருக்க இங்கிலாந்து, கென்யா அணிகளிலும் இந்தியர்கள் அங்கம் வகிக்கின்றனர். மற்றும்




சிறிலங்கா அணியின் முத்தையா முரளிதரனும் இந்தியாவை பூர்வீகமாகக்கொண்ட ஒருவரே. அவர் சிறிலங்கா அணியில் முக்கியமான ஒரு வீரராகவும், சாதனையாளராகவும் திகழ்கின்றார்.

இவர்கள் தமது வசதிகளுக்கேற்ப வேற்று நாடுகளுக்கு புலம் பெயர்ந்து சென்றதால் அந்நாடுகள் அவர்களுக்கு அளித்த வாய்ப்பைக் கெட்டியாகப் பிடித்து அந்நாடுகளின் நம்பிக்கைக்குரியவர்களாகத் திகழ்வது தான் சிறப்பானது.

இதில் குறிப்பாக சென்னையில் பிறந்த நாசர் ஹுசைன் இங்கிலாந்து அணியில் தலைமைப் பதவியை வகிக்கும் அளவுக்கு உயர்ந்துள்ளார்.

இவரது வழியில் தற்போது உதயப்பூரில் பிறந்த விக்ரம் சோலன்கி இங்கிலாந்தின் இன்னொரு நட்சத்திரமாக உருவெடுத்துள்ளார். இது பொதுவாக இந்தியத் கண்டத்து வீரர்களுக்கு இங்கிலாந்தில் நல்ல மதிப்பு காணப்படுவதை உணர்த்துகிறது.



இந்திய வீரர்களைத் தவிர பாகிஸ்தானின் கப்தல் கபிப், உஸ்மான்கப்காஸ்லுவாஸ்ஷா ஆகியோரும் இங்கிலாந்து அணியில் விளையாடியுள்ளனர். இராணி என்பவர் தற்போது விளையாடி வருகிறார். ஆனால் அவர்களால் எதிர்பார்த்தளவு சோபிக்க முடியவில்லை.

இந்நிலையில் சமீபத்தில் நடைபெற்று முடிந்த இங்கிலாந்து, தென்னாபிரிக்கா, சிம்பாவ்வே அணிகள் கலந்துகொண்ட முத்தரப்பு போட்டியில் இங்கிலாந்து அணியில் இடம்பிடித்த விக்கிரம் சோலன்கி தனது திறமையை முழுமையாக வெளிப்படுத்தி அணியில் நிரந்தர இடம் ஒன்றை தேடிக்கொண்டார்.

ராஜஸ்தானில் உள்ள உதயப்பூரில் பிறந்த சோலன்கி எட்டு வயதாக இருக்கும் போது இங்கிலாந்துக்குக் குடிபெயர்ந்து செல்ல நேரிட்டது. 1980ஆம் ஆண்டு இந்தியாவை விட்டுச் சென்ற இவர் 16 ஆவது வயதில் வோர்செஸ்டர் ரையர் கவுண்டி அணியில் அறிமுகமானார். அதன் போது சிறப்பாக செயற்பட்டு இங்கிலாந்து அணியில் விரைவாக இடம்பிடிப்பதற்கு திறமையை வெளிப்படுத்தினார்.

ஆனாலும் தனது முதல் ஒருநாள் போட்டியில் சிறப்பாக சோபிக்கத் தவறிய சோலன்கி அதிகபட்சமாக 24 ஓட்டங்களே பெற்றார்.

இந்த நிலையில் கடந்த சீசனில் கவுண்டி போட்டிகளில் 900 ஓட்டங்களைக் குவித்தமையால் முக்கோணத் தொடருக்கான வாய்ப்பு அவருக்கு தேடிவந்தது. வாய்ப்பைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டார் சோலன்கி.

இந்திய அணியின் சச்சின் ஷேவாக் போன்றோரைப்போல் அதிரடிக்கு முக்கியத்துவம் கொடுக்கும் சோலன்கியை இங்கிலாந்து அணியின் ஷேவாக் என வர்ணிக்கிறார் இங்கிலாந்து அணித் தலைவர் மைக்கல் வோகன்.

சராசரி இந்திய ரசிகர்களைப் போலவே சோலன்கியும் சச்சினின் தீவிரரசிகனாகவே உள்ளார். இந்திய அணி இங்கிலாந்து சுற்றுப்பயணத்தின்போது தனது வோர்செஸ்டர்ரையர் அணிக்கெதிராக சச்சின் விளாசிய 169 ஓட்டங்கள் வாழ்நாளில் என்றுமே மறக்க முடியாதது என்கிறார் சோலன்கி.

பெரும்பாலும் இந்திய கிரிக்கெட் வீரர்களைப் போன்று சதம், அரைச்சதம் பெற்றபின் விண்ணைப் பார்த்து சூரியனுக்கு நன்றிசொல்லும் பழக்கம் இவரிடமும் உள்ளது.

மொத்தத்தில் நாசர்ஹுசைனிற்கு பின் இந்தியாவின் பெயர்சொல்லும்





பிள்ளையாக இவர் திகழ்வார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# திண்டாடும் பங்களாதேஷ் அணி; கவலை வேண்டாம்-வட்மோர்

மூன்று வருடங்களுக்கு முன்னர் டெஸ்ட் அந்தஷ்து பெற்ற பங்களாதேஷ் அணி அன்றிலிருந்து இன்றுவரை ஒரு டெஸ்ட் போட்டியில் தானும் வெற்றி பெற முடியவில்லை. மாறாக பலவீனமான ஓர் அணியாக திண்டாடிக்கொண்டிருக்கின்றது. இது பங்களாதேஷ் அணி டெஸ்ட் அந்தஷ்தைக் காப்பாற்றிக் கொள்ளுமா என்ற கேள்வியை கிரிக்கெட் ஆர்வலர்களிடையே ஏற்படுத்தியுள்ளது.

இந்நிலையில் பங்களாதேஷ் அணியின் புதிய பயிற்றுவிப்பாளராக பதவியேற்றுள்ள டேவ் வட்மோரின் வருகை இருளில் கிடக்கும் பங்களாதேஷ் அணிக்கு ஒளிக்கீற்றாக அமையுமா என்ற தோற்றப்பாட்டையும் உருவாக்கியுள்ளது.



1996ஆம் ஆண்டு இலங்கை அணியை உலக சம்பியனாக்கி உலகக் கிண்ணத்தைப் பெற்றுக்கொடுத்த பயிற்சியாளர் என்ற பெருமையைப் பெற்ற டேவ் வட்மோர் பங்களாதேஷ் அணியையும் உலகக்கிண்ணத்தை கைப்பற்றும் அணியாக மாற்றுவாரா என்பதே தற்போதைய கேள்வியாகவுள்ளது.

தற்போது வட்மோர் பயிற்சியாளராக பதவியேற்றதன் பின்னர் பங்களாதேஷ் அணி அவுஸ்திரேலியாவுக்கான சுற்றுலா ஒன்றை மேற்கொண்டு விளையாடி வருகிறது. இச்சுற்றுலாவின் முதல் டெஸ்ட் போட்டியில் வழமைபோல் பங்களாதேஷ் அணி தோல்வி அடைந்தது.

இத்தோல்வியால் பங்களாதேஷ் அணி கவலை கொள்ளத் தேவையில்லை எனத் தெரிவித்துள்ள பயிற்சியாளர் வட்மோர் இத்தோல்வி எதிர்கால வெற்றிகளுக்குப் படிக்கல்லாக அமையும் என நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

அதேநேரம் பங்களாதேஷ் அணியானது உலகின் தலைசிறந்த அணியோடுதான் தோற்றுள்ளது. இதனால் பல நுணுக்கங்களை அறிய வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. பங்களாதேஷ் அணிக்கு இது ஒரு நல்ல அனுபவம். அவர்கள் இத் தோல்வியை நினைத்து கவலை கொள்ள வேண்டியதில்லை. அடுத்த போட்டியில் முறையாக விளையாடுவார்கள் எனத் தெரிவித்தார்.

அதேபோன்று இரண்டாவது டெஸ்ட் போட்டியில் பங்களாதேஷ் சிறப்பான ஆட்டம் ஒன்றை அவுஸ். அணிக்கு எதிராக வழங்கியுள்ளது. இது நம்பிக்கையை ஏற்படுத்தியிருக்கும் அதேவேளை அவுஸ்திரேலிய அணியினரையும் வியப்பில் ஆழ்த்தியுள்ளது.

நேற்று முன்தினம் ஆரம்பமான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் பங்களாதேஷ் அணி முதல் நாள் ஆட்டத்தின்போது எட்டு விக்கெட்டுக்களை இழந்து 289 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது. இது டெஸ்ட் போட்டி ஒன்றில் ஒரு நாளில் பங்களாதேஷ் அணியால் பெறப்பட்ட அதிகூடிய ஓட்டங்களாகும்.

வேகப்பந்து வீச்சுக்கு சாதகமான ஆடுகளத்தில் நடைபெற்ற இப்போட்டியில் பங்களாதேஷ் அணியை 100 ஓட்டங்களுக்குள் வீழ்த்திவிடுவோம் என போட்டிக்கு முன்னர் தெரிவித்திருந்த அவுஸ். அணிக்கு அவர்களின் முன்னணி வேகப்பந்து வீச்சாளர்களை எதிர்கொண்டு பெற்ற இவ் ஓட்ட எண்ணிக்கை பங்களாதேஷ் அணி புத்துயிர் பெற்றுவிட்டதை காட்டுவதுடன் உலகத் தரம் வாய்ந்த அணி ஒன்றுக்கு எதிராக அதன் சொந்த மண்ணில் பெறப்பட்ட இவ் ஓட்டம் நம்பிக்கையையும் ஏற்படுத்தியுள்ளது.

இதுவரை டெஸ்ட் போட்டியில் வெற்றி பெறமுடியாது தத்தளித்துக் கொண்டிருக்கும் பங்களாதேஷ் அணிக்கு இனி வரும் டெஸ்ட் போட்டிகள் ஒளிமயமானதாக அமையும் என்பதே அனைவரினதும் எதிர்பார்ப்பாகும்.

# தங்கக் கிண்ண கால்பந்தாட்டம்; அரையிறுதி வாய்ப்பை இழந்தது அமெரிக்கா!

தங்கக் கிண்ண கால்பந்து தொடரின் இறுதிப்போட்டியில் விளையாட பிரேசில் அணி தகுதி பெற்றுள்ளது.

அரையிறுதிப் போட்டியில் பிரேசில் அணியும் அமெரிக்க அணியும் மோதின. இந்தப் போட்டியில் 2-1 என்ற கோல்எண்ணிக்கையில் பிரேசில் அணி வெற்றிபெற்று இறுதிப போட்டிக்கு தகுதி பெற்றது.


மகிழ்ச்சியில் பிரேசில் வீரர்கள்

மேற்படி அரையிறுதிப் போட்டியில் பிரேசில் அணியினர் ஆதிக்கம் செலுத்திய போதும் போட்டியின் 62ஆவது நிமிடத்தில் அமெரிக்கா முதல் கோலை அடித்து முன்னிலை வகித்தது. அமெரிக்க அணியின் கிளாடியோ ரெய்னா அடித்த ப்ரீ-கிக்கை கார்லோஸ் போகா னெக்ரா தலையால் முட்டி கோலடித்தார். இதனால் அமெரிக்கா 1-0 என்ற கோல எண்ணிக்கையில் முன்னிலை பெற்றது. இதனால் அமெரிக்காவுக்கு சாதகமாகப் போட்டி நிறைவடையும் சூழ்நிலை இருந்தது. ஆனால் ஆட்டம் முடிய ஒரு நிமிடம் இருந்த நிலையில் அமெரிக்காவின் கோல் காப்பாளர் கெல்லர் தடுத்த பந்தை பிரேசில் வீரர் கோகா கோலடித்து சமன் செய்தார். இதனால் மேலதிக நேரத்துக்கு ஆட்டம் சென்றது. இதில் பிரேசில் வீரர் பீகோ தங்கக் கோல் போட்டு பிரேசில் அணியை இறுதிப் போட்டிக்கு அழைத்துச் சென்றார்.

பிரேசில் அமெரிக்க அணிகள் இதுவரை 12 முறை மோதியுள்ளன. இதில் 11 தடவை பிரேசில் அணியிடம் அமெரிக்கா தோல்வி அடைந்துள்ளது. 1998ஆம் ஆண்டு நடைபெற்ற இந்த சாம்பியன் போட்டியின் அரையிறுதியில் மாத்திரம் அமெரிக்கா பிரேசிலை வீழ்த்தியுள்ளது. வெற்றியின் விளிம்பை அடைந்து தோல்வியைச் சந்தித்த அமெரிக்க அணி கண்ணீர்மல்க வெளியேறியது.

# ஓய்வுபெறுகிறார் அலெக்ஸ் ஸ்ருவேர்ட்

இங்கிலாந்து அணியின் பிரபல துடுப்பாட்ட வீரரும் உலகின் அதி சிறந்த விக்கெட் காப்பாளருமான அலெக்ஸ்ருவேர்ட் டெஸ்ட் போட்டிகளில் இருந்து ஓய்வு பெறப் போவதாக அறிவித்துள்ளார்.

தனது வயதைக் காரணம் காட்டியுள்ள இவர் இவ்வாறான ஒரு முடிவை எடுப்பது இலகுவான காரியமல்ல என்றாலும் நான் ஓய்வு பெற வேண்டிய நேரம் வந்துவிட்டதாக உணர்கிறேன் எனக் குறிப்பிட்டுள்ளார்.

இங்கிலாந்தின் டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டிகளில் விளையாடி வரும் ஸ்ருவேர்ட் 13 வருடங்களாக டெஸ்ட் அணியில் இணைந்து விளையாடி வருகின்றார்.

எதிரணியினருக்கு சிம்மசொர்ப்பனமாக திகழும் இவர் இங்கிலாந்தின் வெற்றிக்கு பெரும் பங்காற்றி வருவதுடன் வீரர்களுடன் அன்பாகப் பழகுவதில் முன்னோடியானவர்.

1990ஆம் ஆண்டு தனது டெஸ்ட் வாழ்க்கையை ஆரம்பித்த ஸ்ருவேர்ட் இதுவரை அதிக டெஸ்ட் போட்டிகளில் கலந்து கொண்ட ஒரே ஒரு இங்கிலாந்து வீரர் என்ற பெருமையைப் பெற்றுள்ளார்.

இது இவ்வாறிருக்க 40 வயதை எட்டிப்பிடித்துள்ள இவர் தென்னாபிரிக்காவுடனான டெஸ்ட் தொடருடன் ஓய்வுபெறுவேன் எனத் தெரிவித்துள்ளார். தென்னாபிரிக்காவுடனான முதலாவது போட்டியுடன் தனது 129ஆவது டெஸ்ட் போட்டியில் பங்கேற்கும் இவர் இதுவரை 40.19 என்ற சராசரியை கொண்டுள்ளதுடன்



15 சதங்கள் அடங்கலாக 8281 ஓட்டங்களை குவித்துள்ளார்.

இதுவரை டெஸ்ட் ஒருநாள் போட்டிக்கு விக்கெட் காப்பாளராக பங்காற்றி வரும் ஸ்ருவேட் ஓய்வுபெறும் பட்சத்தில் இங்கிலாந்து அணி நெருக்கடிகளைச் சந்திப்பது தவிர்க்கமுடியாததாகவே இருக்கும். கடந்த உலகக்கிண்ணப் போட்டியின் போது இவரையே விக்கெட் காப்பாளராக கொண்டு பங்கேற்ற இங்கிலாந்து அணி இவருக்கு பதிலாக ஒருநாள் போட்டியில் இணைக்கப்பட்டுள்ள சகலதுறை வீரர் கிறிஸ்றீட்டிடம் இவரின் பங்களிப்பைப் பெற்றுக் கொள்ளுமா?

## உந்துருளி கிடைத்தது

(ஒட்டுசுட்டான்)

கிளிநொச்சி கால்நடை வைத்திய நிலையத்திற்கு தற்காலிகமாக கிளி. அரச அதிபரினால் உந்துருளி அளிக்கப்பட்டுள்ளது.

இவ் வைத்திய நிலையத்திற்கு உலக உணவுத் திட்டம் ஒரு உந்துருளியும், யூ. என். டி. பி. நிறுவனம் ஒரு உந்துருளியும் அன்பளிப்பு செய்வதாக உறுதி அளித்துள்ளன. இந்நிலையில் வந்து சேரும் வரை கிளி. அரச செயலகத்திற்கு கொண்டு வரப்பட்ட உந்துருளி தற்காலிகமாக வழங்கப்பட்டுள்ளது.

இதனால் தற்போது நடைபெறும் நடமாடும் சேவைக்கு பெரும் உதவியாக அமைந்துள்ளது என கிளிநொச்சி கால்நடை வைத்தியர் திருமதி ரேனுகா கௌரிபாலன் தெரிவித்துள்ளார். (05)

# நோர்வேத் தூதுவர், கண்காணிப்புக் குழுவை வெளியேற வலியுறுத்தி ஆர்ப்பாட்டம்!

## தேசிய பிக்குகள் முன்னணி ஏற்பாடு

(கொழும்பு)

**நோர்வேத் தூதுவரையும், கண்காணிப்புக் குழுவையும் நாட்டை விட்டு வெளியேற்றக் கோரி தேசிய பிக்குகள் முன்னணி நாடு முழுவதும் ஆர்ப்பாட்டம் செய்யவுள்ளது.**

1500 பௌத்த விகாரைகள் முன்பாக இந்த ஆர்ப்பாட்டம் நடைபெறவுள்ளதாக முன்னணி அறிவித்துள்ளது.

இடைக்கால நிர்வாகம் ஒன்று வடக்கு-கிழக்கு மாகாணத்தில் அமைக்கப்படுமானால் சிங்கள, பௌத்த கலாச்சாரத்திற்கும் நாட்டிற்கும் பேராபத்தாகிவிடும் என இவர்கள் ஊடகங்களுக்கு விடுத்துள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

அத்துடன் இவர்களை நாட்டைவிட்டு உடனடியாக வெளியேற்ற வேண்டுமென சனாதிபதியை நேரில் சந்தித்து வேண்டுகோள் விடுத்திருந்தோம். அதேபோன்று அரசாங்கத்திற்கும் மகஜர் அனுப்பியிருந்தோம். ஆனால், அவர்களை வெளியேற்றுவதற்கான நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படவில்லை. நாட்டை பாதுகாக்கும் பொறுப்பு பிக்குகளுக்கு இருப்பதனால் சகல மக்களையும் ஒன்று திரட்டி நோர்வே நாட்டிற்கு எதிராக போர்க்கொடி தூக்கவுள்ளோம். ஜோன்வெஸ்பேர்க் தூதுவர் பதவியிலிருந்து இடமாற்றமாகிச் சென்ற பின்னரும் அவர் தொடர்ந்தும் இலங்கையில் தங்கியிருப்பதன் நோக்கம் என்ன? என்று அவ்வறிக்கையில் கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

புலிகளுக்கு ஆதரவாகச் செயற்படும் எந்தவொரு சர்வதேச நிறுவனத்தையும் இந்த நாட்டில் விட்டு வைக்கக் கூடாதெனவும் அவ்வறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளது.

# வாகனங்களின் வேக அளவைக் கட்டுப்படுத்த காவல்துறையினர் துரித நடவடிக்கை!

(அலுவலக செய்தியாளர்)

வீதி விபத்துக்கள் ஏற்படாது தடுக்கும் முகமாக தமிழீழ காவல்துறையின் வீதிப் போக்குவரத்துப் பிரிவினர் வீதிகளில் வாகனங்களின் வேகத்தினைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதனடிப்படையில் பிரதான மற்றும் முக்கிய நகரப் பகுதிகளில் பயணிக்கும் வாகனங்கள் 40 கி. மீ. வேகத்திலும், இதர மக்கள் நடமாட்ட மற்றபகுதிகளில் 60 கி. மீ. வேகத்திலும் வாகனங்களைச் செலுத்தலாமென தமிழீழ காவல்துறை வீதிப் போக்குவரத்துப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

மோட்டார் சைக்கிள் முதல் மற்றும் இதர வாகனங்களும் மேற்படி நடைமுறையினை கைக் கொள்ளும் வண்ணம் அவர்கள் வேண்டியுள்ளதுடன் இதனை மீறி செயற்படும் வாகன ஓட்டிகள் மீது சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமென தமிழீழ காவல்துறையின் வீதிப் போக்குவரத்துப் பிரிவினர் தெரிவித்துள்ளனர். (சோ)

## நீதிமன்றங்கள் முன்பாக அமைதி பேண வேண்டுகை

தமிழீழ நீதிமன்றங்களின் முன்னாலுள்ள வீதிகளில் செல்லும் வாகனங்கள் நீதிமன்றின் முன்னால் வீதியில் பயணிக்கும் பொழுது ஒலி எழுப்புவது கடந்த 23ஆம் திகதி முதல் தடைசெய்யப்பெற்றுள்ளதாகத் தெரிய வந்துள்ளது. இது குறித்து தமிழீழ காவல்துறை வீதிப் போக்குவரத்துப் பிரிவினர் தெரிவிக்கையில்; தமிழீழ நீதிமன்று அமைந்துள்ள பகுதிகளுக்கு முன்னால் உள்ள வீதிகளில் பயணிக்கும் வாகனங்கள் அவ்விடத்தில் பயணிக்கும்போது ஒலியெழுப்புவதையோ ஒலியெழுப்பிய வண்ணம் செல்வது கடந்த 23ஆம் திகதி முதல் தடை செய்யப்பட்டுள்ளது.இதனை மீறுவோர் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பெற்று நீதிமன்றில் முற்படுத்தப்படுவர் எனவும் ஒலி எழுப்புவது தடை செய்யப்பட்டுள்ளது என்பதற்கான குறியீடுகள் நீதிமன்றுகள் அமைக்கப்பட்டுள்ள பகுதிகளின் வீதி அருகாமையில் பொருத்தப்பட்டுள்ளதெனவும் இதனை அனுசரித்து வாகனங்களைச் செலுத்துமாறு [illegible] (சோ)

# வட்டக்கச்சி பகுதியில் வீதி விபத்துக்கள் அதிகரிப்பு

(வட்டக்கச்சி)

வட்டக்கச்சிப் பகுதியில் அண்மை நாட்களாக வீதி விபத்துக்கள் ஏற்பட்ட வண்ணம் உள்ளது. வட்டக்கச்சி சந்தையடியில் அடிக்கடி வீதி விபத்துக்கள் நடைபெறுகின்றன. அதேபோன்று வட்டக்கச்சி மகாவித்தியாலய சந்தியில் தொடர்ந்து இரு தினங்களாக வீதி விபத்துக்கள் நடைபெற்றுள்ளன.

இந்த விபத்துக்களுக்கு அதிக வேகமே காரணமாகியுள்ளன. காலை வேளையில் விபத்துக்கள் அதிகமாக உள்ளன. கடந்த செவ்வாயன்று உந்துருளியில் வந்த நபர் பாடசாலை மாணவனை மோதி விட்டு நிற்காது சென்றுள்ளார். இது போன்று பாடசாலை மாணவர்கள் விபத்துக்குள்ளாகி வருகின்றனர்.பாடசாலைகள், பொதுச்சந்தை ஏனைய பிரதான இடங்களில் வேகக் கட்டுப்பாடு பிரதான வீதி கிளை வீதிகள், இணையுமிடம், பாடசாலைகள் என்பவற்றை அடையாளம் காட்டும் சமிக்ஞைக் குறியீடுகளை அமைத்து வீதி ஒழுங்குகளைக் கடைப்பிடிக்கப்படாமையாலேயே இந்த விபத்துக்கள் ஏற்படுகின்றன.அத்தோடு, வீதிகளின் மோசமான நிலை, வாகன சாரதிகளின் அலட்சியமான போக்குகளும் விபத்துக்கள் இடம்பெற ஏதுவாகின்றன என்பதும் குறிப்பிடத்தக்கது. (12)

# 59 பேர் காக்கை வலிப்பு நோய்க்குச் சிகிச்சை பெற்றனர்

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்ட ஊனமுற்றோர் புனர்வாழ்வுச் சங்கத்தினால் நடாத்திய இலவச மருத்துவ சேவையில் 59 பேர் பயன் பெற்றுள்ளனர்.

மேற்படி சிகிச்சை நோர்வே நாட்டில் இருந்து வருகை தந்த நரம்பியல் நிபுணர் வைத்திய கலாநிதி ஆசைபோசப் உதவியோடு நடைபெற்ற காக்கை வலிப்பிற்கான மருத்துவ சிகிச்சை முகாமில் கரைச்சி உதவி அரச அதிபர் பிரிவில் 28 பேரும், கண்டாவளை உதவி அரச அதிபர் பிரிவில் 14 பேரும், பூநகரி உதவி அரச அதிபர் பிரிவில் 17 பேரும் சிகிச்சை பெற்று பயனடைந்துள்ளனர். (பா)

# கலைநிகழ்வு

(கண்டாவளை)

விசுவமடு றெட்பானா சோழர் பூங்கா 10ஆம் ஆண்டு நிறைவை முன்னிட்டு மாபெரும் கலைநிகழ்வு சோழர் பூங்கா மைதானத்தில் வியாழன்று பி.ப. 6.00 மணிக்கு நிர்வாகி திருமதி விஸ்வநாதன் நிலாமதி தலைமையில் இடம் பெற்றது.விசுவமடு பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளர் செழியன் தேசியக் கொடியினை ஏற்றி வைத்து சிறப்புரையாற்றினார். தொடர்ந்து கலை நிகழ்வுகள் இடம்பெற்றன. (14)

# ஆரம்ப சுகாதார நிலைய அடிக்கல் நாட்டும் நிகழ்வு

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்டத்தில் புதுமுறிப்பு, உருத்திரபுரம் ஆகிய இடங்களில் ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு இடம்பெற்றுள்ளது.

நேற்று முன்தினம் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் ஆதரவுடன் யு. என். எச். சி. ஆர். நிதியுதவியுடன் போறூட் நிறுவன அனுசரணையுடன் அகதிகள்புனர்வாழ்வு நிறுவனத்தினால் காலை 10.00 மணிக்கு புதுமுறிப்பு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கான அடிக்கல்லினை போறூட் நிறுவனத் திட்ட இணைப்பாளர் கௌசலாநாதனும், பகல் 1. 00 மணியளவில் உருத்திரபுரம் வடக்கு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கான அடிக்கல்லினை உருத்திரபுரம் வடக்கு கிராம சேவையாளர் வைத்தீஸ்வரமூர்த்தியும் நாட்டி வைத்தனர்.

மேற்படி நிகழ்வில் போறூட் நிறுவனப் பிரதிநிதிகள், தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பிரதிநிதிகள், நெற்றோ நிறுவனப் பிரதிநிதிகள், வலயப் பொறுப்பாளர்கள், சமூக பொருளாதார அபிவிருத்திக் குழுவினர், பொது மக்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (பா)

# மாகாண மட்டப் போட்டியில் கிளி. 4இடங்களைப் பெற்றது

(அலுவலக செய்தியாளர்)

மாகாண மட்டத்திலான பாடசாலைகளுக்கிடையேயான தமிழ்த்தின எழுத்தாக்கப் போட்டியில் கிளிநொச்சி மாவட்டம் நான்கு இடங்களைப் பெற்றுள்ளது.

மேற்படி போட்டியில் கட்டுரை வரைதல் போட்டியில் செல்வி ந. பவித்திரா (புனித பெண்கள் திரேசா கல்லூரி), வி. அருணா (வட்டக்கச்சி ம.வி.) இ. மோகனாம்பிகை (பூநகரி ம.வி.) ஆகியோர் கவிதை ஆக்கப் போட்டியிலும் ப. நிருத்திகா (கிளிநொச்சி ம.வி.) சிறுகதைப்போட்டியிலும்வெற்றியீட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (பா)

# தேறாங்கண்டல் அ.த.க.வில் நிரந்தரக் கட்டடம் அமைப்பு

(அலுவலக செய்தியாளர்)

நிக்கோட் நிறுவன நிதியுதவியில் துணுக்காய் தேறாங்கண்டல் அ.த.க.பாடசாலையில் 110' x 25' நிரந்தரக் கட்டடம், மலசல கூடம் என்பன புதிதாக அமைக்கப்பட்டு வருகின்றன.

மேற்படி பாடசாலையில் தரம்-1 தொடக்கம் 9 வரையான வகுப்புக்கள் உள்ளதோடு 260 வரையான மாணவர்கள் கல்வி பயின்று வருகின்றனர். 12 ஆசிரியர்கள் தேவையானவிடத்து 06 ஆசிரியர்கள் மட்டுமே கடமையில் உள்ளனர். இப்பாடசாலையில் மலசல கூட வசதி, நிரந்தரக் கட்டட வசதி, குடிநீர் வசதி என்பன இல்லாது இருந்தது. தற்போது நிரந்தரக் கட்டடம், மலசல கூடம் என்பவற்றை நிக்கோட் நிறுவன நிதியுதவியுடன் அமைக்கப் படுகிறது. மேலும் இப்பாடசாலை யினைச் சூழ வேலி மற்றும் கிணறு, ஆசிரியர் விடுதி என்பனவும் இல்லாது உள்ளது.

துணுக்காய் கல்வி வலயத்தில் மகிழ்ச்சிகர கல்வியூட்டல் பாடசாலையாக தெரிவு செய்யப்பட்ட இரு பாடசாலைகளில் இப்பாடசாலையும் அடங்குகின்றமை குறிப்பிடத்தக்கது. (பா)

## செயற்குழு கூட்டம்

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி தமிழ்ச் சங்கத்தின் மாதாந்த செயற்குழுக் கூட்டம் இன்று நடைபெறவுள்ளது.

மேற்படி கூட்டம் இன்று காலை 9.00 மணிக்கு கனகபுரம் உயர் நிலைப் பள்ளியில் நடைபெறவுள்ளது இக்கூட்டத்தில் முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்ற வேண்டியுள்ளதால் அனைவரையும் தவறாது வருகை தருமாறு தமிழ்ச் சங்கச் செயலாளர் வே. பரமநாதப்பிள்ளை தெரிவித்துள்ளார். (பா)

### மன்னார் மாவட்டத்தில்

# கால் நடை உற்பத்தி சுகாதார விரிவாக்க வேலைத்திட்டம்

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் ஒழுங்குபடுத்தலில் கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களமும், மன்னார் மாவட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனமும் இணைந்துமன்னார் கால் நடை வைத்தியர் பிரிவிற்குட்பட்ட மாந்தை மேற்கு உதவி அரசாங்க அதிபர் பிரதேசத்தில் கால் நடைகளுக்கான தொண்டை அடைப்பான் விசேட நோய்த்தடுப்பு வேலைகளை ஆரம்பித்துள்ளன. கடந்த 22ஆம் திகதி இவ்வேலைகள் ஆரம்பமாகின.

மன்னார் கால்நடை வைத்தியர் செல்வி க. செல்லையா அவர்களுடன் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினரும் சேர்ந்த ஆறு பேர் கொண்ட குழுவினரும் கிராமம் கிராமமாகச் சென்று கால் நடை பண்ணையாளர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு அளிக்கப்பட்டுக் கொண்டு வருகின்றது. கோழிகளுக்கான கொள்ளை நோய் தடுப்பு மருந்துகளும், மாடு ஆடு,கோழிகளுக்கான குடற்புழு மருந்துகளும் வழங்கப்பட்டு வருகின்றன. கால் நடைப் பண்ணையாளர்களின் நன்மை கருதி செயற்கைமுறை சினைப்படுத்தல் வேலையும், நலமடித்தல் வேலைகளும் உரிய வேளைகளில் நடைபெற்று கொண்டு வருகின்றன. இச் சேவை தற்பொழுது சாளம்பன், மிதுக்கன், பிள்ளையார் பிட்டி, பரப்புக்கடந்தான், வட்டக்கண்டல், பாலம்பிட்டி, ஆண்டான்குளம், கருங்கண்டல், அடம்பன்தாழ்வு ஆகிய கிராமங்களில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இத்தொடர் நடவடிக்கை மன்னார் மாவட்டத்திலுள்ள ஏனைய பிரதேசங்களுக்கு அமுல்படுத்தப்படும் எனவும் மன்னார், முருங்கன் கால் நடை வைத்தியர் பிரிவுகளில் விரிவாக்க வேலைகளையும் மேற்கொள்வார்கள் எனவும் கால் நடை வைத்திய அதிகாரி தெரிவித்துள்ளார். எனவே உரிய நேரத்தில் இக்குழுவினருடன் ஒத்துழைத்து ஆலோசனைகளைப் பெற்று பயன்பெறுமாறு மன்னார் முருங்கன் கால் நடை வைத்தியரும் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினரும் சகல கால்நடை பண்ணையாளர்களையும் கேட்டுக்கொள்கின்றார்கள்.

# முன்பள்ளி மாணவர்களுக்கு சத்துணவுத் திட்டம் ஆரம்பம்

(கண்டாவளை)

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் அனுசரணையுடன் வேல்ட் விசன் நிறுவன நிதி உதவியுடன் கரைச்சி வடக்கு அபிவிருத்தி நிறுவனம் நடைமுறைப்படுத்தும் அம்பிராசாபுரம் முன்பள்ளி மாணவர்களுக்கான சத்துணவுத் திட்டம் வழங்கும் வைபவம் கடந்த புதனன்று கண்டாவளைப் பிரதேச முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலைய இணைப்பாளர் செல்வி இ. அபிராமி தலைமையில் ஆரம்பமானது.

வேல்ட் விசன் நிறுவன பிரதி நிதி, மருத்துவ மாதுக்கள், கரைச்சி வடக்கு அபிவிருத்தி நிறுவன பணியாளர்கள், கிராமத் தலைவர், கிராம மக்கள் உட்பட பலரும் கலந்து கொண்டனர். (14)

# கிளி.மாவட்டத்தில் புனரமைப்புப் பணிகள் ஒப்பந்தக்காரர் இன்மையால் பாதிப்பு

## - ஒதுக்கப்பட்ட நிதிக்கும் ஆபத்தென்கிறார் அரச அதிபர்

(அலுவலக செய்தியாளர்)

**கிளிநொச்சி மாவட்டத்தில் கட்டட நிர்மாண வேலைகள் மற்றும் பிற புனரமைப்புப் பணிகளையும் மேற்கொள்வதற்கு தகுதியான ஒப்பந்தக்காரர்கள் இல்லாமையால் பெருமளவு வேலைகள் தேங்கி இருப்பதாக கிளி. அரச அதிபர் தி. இராசநாயகம் தெரிவித்துள்ளார்.**

யுத்தத்தினால் மிகவும் மோசமாக சேதமடைந்துள்ள கிளிநொச்சி மாவட்டத்தை தற்போதைய சமாதான சூழலின் காரணமாக நேர்த்தியான முறையில் கட்டி எழுப்புவதற்கு உரிய சந்தர்ப்பம் எமக்கு இப்போது கிடைத்துள்ளது. அத்தகைய ஒரு சந்தர்ப்பத்தை சரியான முறையில் பயன்படுத்துவதற்கு போதியளவு நிதி கிடைக்காது விட்டாலும் எமக்குக் கிடைத்துள்ள நிதியைக் கொண்டு குறிப்பிட்ட வேலைத் திட்டங்களை மேற்கொள்வதற்கு ஒப்பந்தக்காரர்கள் இல்லாமையால் அவற்றை மேற்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட அனுமதிக்கப்பட்டு நிதி வழங்கப்பட்டிருந்த இருபத்திரண்டு வேலைத்திட்டங்களை மேற்கொள்வதற்கு ஒப்பந்தக்காரர்களை பதிவு செய்யக் கோரி கிளி. அரச செயலகத்தால் இருபத்திரண்டு வேலைத்திட்டங்களுக்கும் ஒரு வேலைக்கு தலா மூன்று முறை வீதம் பல தடவைகள் பத்திரிகை ஊடாக விளம்பரப்படுத்தியும் நாம் எதிர்பார்த்தவாறு ஒப்பந்தக்காரர்கள் முன்வரவில்லை.

எம்மால் விளம்பரப்படுத்தப்பட்ட இருபத்திரண்டு வேலைத்திட்டங்களுக்கும் பதினாறு ஒப்பந்தக்காரர்கள் முன்வந்தனர். ஆனாலும் அவர்களில் தகுதியானவர்கள் பதினொரு பேர் மாத்திரமே. ஏனைய ஐவரும் தகுதியற்றவர்கள். எனவே பதினொரு வேலைத் திட்டங்கள் மாத்திரம் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகிறது. மீதி பதினொரு வேலைத் திட்டங்களுக்கும் ஒப்பந்தக்காரர்கள் இன்மையால் அந்த வேலைகளை மேற்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. எனவே அவ்வாறு மேற்கொள்ள முடியாதுள்ள நிர்மாணப் பணிகளுக்காக ஒதுக்கப்பட்ட பெருமளவு நிதி எமது பகுதிகளுக்குப் பயன்படாது மீண்டும் திரும்பும் அபாயகரமான நிலை ஏற்பட்டுள்ளது எனவும் கிளி. அரச அதிபர் மேலும் தெரிவித்தார். (லோ)

## வருடாந்த விளையாட்டு விழா

(உடையார்கட்டு)

பெற்றோரும் சமூக பொருளாதார வளர்ச்சி நிறுவனமும் இணைந்து உடையார்கட்டு-சுதந்திரபுரம் சந்தி அன்னை பூபதி முன்பள்ளி சிறார்களுக்கான வருடாந்த விளையாட்டு விழாவை நாளை மறுதினம் பி.ப. 2.00 மணிக்கு மிகவும் சிறப்பாக முன்பள்ளி மைதானத்தில் நிகழ்த்தவுள்ளனர். (19)

## தடுத்து வைக்கப்பட்ட மரங்களை விற்ற முன்னாள் நீதிபதி கைது

(கொழும்பு)

புத்தளம் மஜிஸ்ரேட் நீதிமன்றத்தால் தடுத்து வைக்கப்பட்டிருந்த பெருந்தொகை மரங்களை விற்றதாக முன்னாள் புத்தள மாவட்ட நீதிபதி ஒருவரும் பதிவாளர் ஒருவரும் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேற்படி சட்டவிரோத மரங்கள் சிலாபம் வனவள அதிகாரிகளினால் கைப்பற்றப்பட்டு புத்தளம் நீதிபதியிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தன எனவும் இவைகளை ரகசியமாக தனியார் ஒருவருக்கு விற்றிருப்பதாகவும் சந்தேக நபர்கள் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. இது தொடர்பாக இரகசியப் பொலிசார் மேலும் விசாரணை நடத்தி வருகின்றனர். மேற்படி மரங்களின் பெறுமதி 2 லட்சத்து ஐம்பதினாயிரம் ரூபாய் எனத் தெரியவருகின்றது.

## ச.பொ.அபிவிருத்தி வங்கி வடமராட்சி கிழக்கில் திறப்பு

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் அனுசரணையுடன் வடமராட்சி கிழக்குப் பிரதேசத்திற்கான சமூக பொருளாதார அபிவிருத்தி வங்கித் திறப்பு விழா நிகழ்வு நேற்று முன்தினம் மு.ப.11.00 மணியளவில் தாளையடியில் இடம்பெற்றது.

தமிழர் புனர்வாழ்வுக் கழக யாழ் மாவட்ட இணைப்பாளர் ஜெயராஜசிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அக வணக்கத்தைத் தொடர்ந்து வங்கியின் பெயர்ப்பலகையினை வடமராட்சி கிழக்கு அபிவிருத்திப் புனர்வாழ்வுக் கழகத் தலைவர் திரவியராஜா திரைநீக்கம் செய்து வைக்க,

தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பணிப்பாளர் சந்திரன் நாடாவினை வெட்டி வங்கியினைத் திறந்து வைத்தார். தலைமை உரையைத் தொடர்ந்து சிறப்புரைகளை வடமராட்சி கிழக்கு அபிவிருத்திப் புனர்வாழ்வுக் கழகத் தலைவர் திரவியராஜா தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் கடற்புலிகள் பிரதேசத்திற்கான இணைப்பாளர் விநாயகம், வடமராட்சி கிழக்குக் கடற்புலிகளின் அரசியல்துறை மக்கள் தொடர்பாளர் யாழ். மன்னன் ஆகியோர் நிகழ்த்தினர்.


## 2ஆம் ஆண்டு நினைவில்...

அன்னையின் மடியில்
07 □ 02 □ 1940



ஆண்டவன் அடியில்
27 □ 07 □ 2001

### அமரர் கனகசபை செல்வராசா

சிலாவத்தை, முல்லைத்தீவு.

பாசத்தைப் பொழிந்து நேசத்துடன்
உருவான அன்பான தெய்வமே!
நம் தலைகள் நிமிர்ந்து நின்றிட
அயராது உழைத்து வளர்த்து பல
புத்திமதிகள் கூறினீர்.
ஆயிரம் உறவுகள் இருந்தாலும்
ஐயா என்று அழைக்க ஓர் உறவில்லை ஐயா
எங்கள் உயிர் உள்ளவரை
உங்களை மறவோம்.

ஓம் சாந்தி! சாந்தி!

செ. சந்திரன் (மகன்)
அன்பு நிலா
புடவை வாணிபம்,
புதுக்குடியிருப்பு,
பொதுச்சந்தை.

உங்கள் நினைவில் வாடும்
**மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

(3466)


## மக்கள் சந்திப்பு

புதுக்குடியிருப்பு நகர் வலயத்தின் வேணாவில் கிராம மக்களுக்கான சந்திப்பொன்றை புதுக்குடியிருப்புப் பிரதேச அரசியல்துறையினர் கடந்த வியாழனன்று மாலை 7.00 மணிக்கு மேற்கொண்டனர். ஊரக தேசபேரவைச் செயலாளர் கணேஸ் தலைமையில் சமகால அரசியல் கருத்துரையை புதுக்குடியிருப்புப் பிரதேசப் பொறுப்பாளர் பிறையாளன், புதுக்குடியிருப்பு நகர் வலயப் பொறுப்பாளர் இரத்தினம் ஆகியோர் வழங்கினர். (19)

## விசர் நாய் தடுப்பூசி ஏற்றல்

(பூநகரி)

பூநகரியில் சாமிப்புலம், ஆலங்கேணி, நல்லூர் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த 112 நாய்களிற்கு பூநகரி கால்நடை வைத்தியரால் விசர்நாய் தடுப்பு மருந்து வழங்கப்பட்டது. இச்செயற்திட்டம் தொடர்ந்து பூநகரியின் மற்றக் கிராமங்களிற்கு இடம்பெறும் என்பதும் குறிப்பிடத்தக்கது. (34)

## கட்டுப்பாடற்ற விலையில் விற்பனை

(உடையார்கட்டு)

உடையார்கட்டு கலைமகள் முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழாவின்போது ஐஸ்பழ விற்பனைக்கு வந்த நடமாடும் துவிச்சக்கரவண்டி வியாபாரிகள் ஐஸ் பழத்தை அதிக விலையில் விற்பனை செய்தனர்.

இதனால், சிறார்கள் ஏமாற்றமும் ஆச்சரியமும் அடைந்தனர். ஒரு ஐஸ் பழத்தை பத்து ரூபாவிற்கு இவர்கள் விற்பனை செய்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (19)

## தேசிய எழுச்சிப் பேரவையின் பேராளர் சங்கம நிகழ்வு

(அலுவலக செய்தியாளர்)

முழங்காவில் பிரதேசத்தில் தமிழீழ தேசிய எழுச்சிப் பேராளர் சங்கம நிகழ்வு இடம் பெற்றுள்ளது.

கடந்த திங்கட்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் கரியாலை நாகபடுவான் மக்கள் நிறுவன மண்டபத்தில் தேசிய எழுச்சிப் பேரவையின் செயலாளர் பொ. தங்கராசா தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பொதுச் சுடரை மன்னார் மாவட்ட கடற்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் காதர், தமிழீழ தேசியக் கொடியினை கிளி. மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் முரளி ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

தொடர்ந்து மக்கள் அனைவரும் ஒருமித்து உறுதியுரையினை கூறினர். மேற்படி நிகழ்வில் பேரவையின் செயற்பாடுகள் பற்றியும் தற்போதைய அரசியல் நிலை பற்றியும் கிளி.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் முரளி, பேரவையின் செயலாளர் தங்கராசா ஆகியோர் எடுத்து விளக்கினர். இந்நிகழ்வில் கிராம சேவையாளர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (பா)

## பொதுக்கிணறுகள் அமைக்க ஏற்பாடு

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் முல்லை மக்கள் நலன்புரிச் சங்கத்தினர் முல்லைத்தீவு கரையோரப் பகுதியில் உள்ள மக்களின் வசதி கருதி அப்பகுதியில் உள்ள பொது இடங்கள், முன்பள்ளிகள், மயானம் ஆகியவற்றில் 18 குடிநீர் பொதுக் கிணறுகளை அமைக்கவுள்ளனர். 24,33,590 ரூபா நிதி ஒதுக்கீட்டில் அமைக்கப்படவுள்ள இப்பொதுக் கிணறுகளானது முல்லைத்தீவு கரையோரப் பகுதியான செம்மலை தொடக்கம் வட்டுவாகல் பகுதி வரையான இடங்களிலேயே அமைக்கப்படவுள்ளதாக முல்லை மக்கள் நலன்புரிச் சங்க இணைப்பாளர் செ.நகுலசீலன் தெரிவித்துள்ளார். (ஆ)


## மரண அறிவித்தல்

பிறப்பு
23 □ 06 □ 1956



இறப்பு
25 □ 07 □ 2003

### வேலுப்பிள்ளை நவரத்தினம்

அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும், புதுக்குடியிருப்பு 2ஆம் வட்டாரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை நவரத்தினம் என்பவர்(குமரன் கபே, குமரன் வெதுப்பக உரிமையாளர்)25-07-2003 அன்று காலமானார். அன்னார் திலகவதியின் அன்புக் கணவரும், தமயந்தி, சஜீவன், சஜிந்தன், சஜீகன் ஆகியோரின் அன்புத் தந்தையும், அருளானந்தம், செல்லத்துரை, தவரத்தினம் (சுவிஸ்), கமலாதேவி, விமலாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரரும், அன்னலட்சுமி, லலிதாராணி, நடேசபிள்ளை ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் 27-07-2003 ஞாயிறு காலை 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று புதுக்குடியிருப்பு இந்து மயானத்திற்கு தகனக் கிரியைக்காக கொண்டு செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:
**மைத்துனர், நடேசபிள்ளை.**

பிள்ளையார் புடவை மாளிகை,
புதுக்குடியிருப்பு. (சி-7768)



## ஓராண்டு நினைவலைகள்

அன்னையின் மடியில்
25 □ 05 □ 1972



மண்ணின் மடியில்
06 □ 08 □ 2002

### நாட்டுப்பற்றாளர் முருகேசு ரவீந்திரன்

**(ரவி, மேவின்)**

சேனையூர், மூதூர், திருமலை.

ஆதவனாய் இருந்து ஒளி தந்த எம் அன்புத் தெய்வமே
உங்கள் பிரிவை நினைத்து எம் உள்ளங்கள் தவிக்கின்றன.
ஓர் ஆண்டு ஓடி வந்தாலும் உங்கள் நினைவுகள்
எம்மை விட்டு என்றும் நீங்காது.

1 ஆம் வட்டாரம்,
அன்பு வீட்டுத்திட்டம்,
புதுக்குடியிருப்பு. (சி-7769)

**- குடும்பத்தினர்.**



## சிந்தனைக்கு

சமூக நீதியும் சனநாயக சுதந்திரங்களும் தழைத்தோங்கும் ஓர் உன்னத சமுதாயத்தைக் கட்டியெழுப்புவதே எமது இலட்சியமாகும்.

தமிழீழத் தேசியத்தலைவர்

ஈழநாதம்
EELANATHAM மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 27-07-2003

# இரகசியம் காக்கோம்

இடைக்கால நிர்வாகக் கட்டமைப்புக் குறித்த திட்டவரைவு இரகசியத்தை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கோரியதைப் போன்று பேணப்போவதில்லை எனச் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார். இவரின் இக்கூற்றுக்கள் அரசாங்கத்தின் இடைக்கால . நிர்வாகம் குறித்த செயற்றிட்டத்திற்கு ஒத்துழைக்கப்போவதில்லை என்ற அவரின் நிலைப்பாட்டை மீண்டும் ஒருதடவை வெளிப்படுத்துவதாயுள்ளது.

ஐ.தே. முன்னணி அரசாங்கத்தின் இடைக்கால நிர்வாகக் கட்டமைப்புக் குறித்த தீர்மானத்திற்கு சனாதிபதி சந்திரிகாவிடம் இருந்தும் பொ.ஐ. முன்னணியிடம் இருந்தும் ஒத்துழைப்புக் கிடைக்கப்பெறாது என்பது எதிர்பார்க்க முடியாததல்ல. இவ் எதிர்ப்பிற்கு ஐ.தே. முன்னணி அரசாங்கத்தின் நடவடிக்கைக்கு எதிர் நடவடிக்கை, தமிழ் மக்களின் உரிமைகளுக்கு எதிரான நடவடிக்கை என்ற இருவகையில் பொ.ஐ. முன்னணியின் நடவடிக்கை எதிர்பார்க்கத்தக்கதாகும்.

ஆகையினால், ஆட்சியிலுள்ள அரசாங்கமும், ஆட்சிக்குத் தலைமை தாங்கும் சனாதிபதியும் – சிறிலங்கா அரசியல் யாப்பின் பிரகாரம் இவ்வாறே கூறமுடியும்– முக்கியமான பிரச்சினைகளில் ஒத்த கருத்துடன் செயற்பட முடியாது இருப்பதும், ஒருவரது கருத்திற்கு ஒருவர் செவிசாய்க்காது இருப்பதும், பொறுப்புடைய அரசாங்கத்தினதும், ஆட்சியில் உள்ளவர்களினதும் சரியான நடவடிக்கைகளாக இருக்கமாட்டாது.

இனப்பிரச்சினைக்கு அரசியற் தீர்வொன்று காணப்பட வேண்டுமானால் சிறிலங்காவிலுள்ள இரண்டு பிரதான கட்சிகளும் ஒருமித்த சில முடிவுகளுக்கு வந்தே ஆக வேண்டும். ஆனால், அவ்வாறு வராத பட்சத்தில், இனப்பிரச்சினைக்கு அரசியற்தீர்வொன்று சாத்தியமாகப்போவதில்லை. அதிலும் குறிப்பாக, தற்பொழுது இனப்பிரச்சினை தொடர்பான சமாதான முயற்சிகள் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட வேண்டுமானால் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் ஒத்துழைப்பு அரசாங்கத்திற்குத் தேவையானதாகும்.

சிறிலங்காவின் ஆட்சியாளர்கள் என்ற ரீதியில் இன்று ஐ.தே. முன்னணி அரசாங்கமும், சனாதிபதி சந்திரிகாவும் இணக்கப்பாட்டுடன் செயலாற்ற வேண்டும். அவ்வாறு இல்லாதுவிடில், சிறிலங்கா அரச இயந்திரம் ஸ்தம்பித நிலையை அடைவதோ அன்றி சிறிலங்கா அரசாங்கம் நெருக்கடியில் சிக்குவதோ தவிர்க்க முடியாததாகவே இருக்கும்.

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிற்கும், -ஐ.தே. முன்னணி அரசாங்கத்திற்கோ அன்றி பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கும் இடையேயான கருத்து முரண்பாடுகள் எத்தகையதாகவும் இருக்கலாம். ஆனால், ஆட்சிப் பொறுப்பில் இருக்கும் இவ் இரு தரப்பும் தமது முரண்பாடுகளையே முனைப்பாகக் கொண்டு செயற்படுவது அவர்கள் சிறிலங்கா அரசிற்கும், அரசியல் யாப்பிற்கும் விரோதமாகச் செயற்படுவதாகவே கொள்ளத்தக்கதாகும்.

சிறிலங்காவின் சனாதிபதி என்ற ரீதியில் யாருடைய அரசாங்கம் ஆயினும் சரி அதற்கு சனாதிபதியே தலைவர் ஆகின்றார். இதன் பிரகாரம் அமைச்சரவைக்கும் நடவடிக்கைகளுக்கும் அவரே பொறுப்பானவராகிறார். மாறாக அதற்குக் கட்டுப்பட்டவரும் ஆகின்றார். அதாவது, அமைச்சர்களை நியமிப்பதற்கும், நீக்குவதற்கும் அவரிடம் எவ்வாறு அதிகாரம் உள்ளதோ அதேபோன்று அமைச்சரவையின் தீர்மானங்கள், நடவடிக்கைகள் என்பனவற்றிற்கும் அரசியல் யாப்பின் பிரகாரம் அவர் பொறுப்பானவர் ஆகின்றார்.

இந்நிலையில், அமைச்சரவையின் தீர்மானம் ஒன்றை ஏற்றுக் கொள்ளப்போவதில்லை, அமைச்சரவையின் முடிவையோ பிரதமரின் கோரிக்கையை ஏற்றோ செயற்படப்போவதில்லை எனச் சனாதிபதி கூறுவதானது, அவர் அமைச்சரவைக் கூட்டுப் பொறுப்பையும், இரகசியக் காப்புப் பிரமாணத்தையும் மீறும் செயலாகவே இருக்க முடியும்.

இந்நடவடிக்கையானது, சிறிலங்கா அரசியல் யாப்பு விதிகளுக்கு மாறானது மட்டுமல்ல, சனநாயக ஆட்சி அமைப்பின் மரபுகளையும் மீறும் செயலாகவே இருக்கும். அதேசமயம், சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் சத்தியப் பிரமாணத்திற்கும் மாறானதொன்றாகவே இருக்க முடியும். அதேசமயம், இரகசியக் காப்பு பிரமாணத்தை மீறும் நடவடிக்கையானது தேசத்திற்குத் துரோகம் இழைக்கும் நடவடிக்கையாகவே கொள்ளத்தக்கதாகும்.

ஆனால், இவ்விவகாரங்கள் இன்று சிறிலங்கா அரசியலில் பேசப்படும் அளவிற்கோ அன்றி சிந்திக்கும் அளவிற்கோ உயர்ந்த அளவில் சனநாயகப் பண்புகள் கருத்திற் கொள்ளப்படுவதாக இல்லை. அதாவது, இன்று நாட்டிற்குத் துரோகம் இழைப்பது பற்றியோ, நாட்டின் நலன்கள் குறித்தோ சிறிலங்கா அரசியற்கட்சிகள் எவையும் கரிசனை கொண்டவையாக இல்லை.

அரசியல் தலைவர்களின் இன்றைய பார்வையில் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுதல் அன்றி ஆட்சியில் உள்ளவர்களைக் கவிழ்த்தல் என்பவையே முக்கியமானவையாகும். இதற்கு அவர்கள் எத்தகைய தேசத் துரோகச் செயல்களிலும் இறங்கத் தயாராக இருப்பது மட்டுமல்ல, நாட்டை எவரிடமும் காட்டிக்கொடுக்கவும் தயாராகவே உள்ளனர். இன்று நாட்டின் சுதந்திரம், இறைமை என்பனவற்றை விட சிறிலங்கா ஆட்சியாளருக்கு ஆட்சி அதிகாரமே முதன்மையானதாகும்.

# மிருசுவில் படுகொலை விசாரணை பாதுகாப்பு இன்மையால் பாதிப்பு!

## மனித உரிமை ஆணைக்குழுவிற்கு முறைப்பாடு

மிருசுவில் படுகொலைகள் தொடர்பான விசாரணைகள் கொழும்பில் நாளை மறுதினம் 29ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. அதேவேளை இவ் விசாரணைகளின் போது தமக்கு உரிய பாதுகாப்பு அளிக்கப்பட வேண்டுமென படுகொலை குறித்து சாட்சியமளிக்கவுள்ளவர் கூறியுள்ளார்.

மனிதவுரிமைகள் ஆணைக்குழுவிடமே இது குறித்து கூறியுள்ளார். கொழும்பில் தமக்கு உரிய பாதுகாப்பை அளிக்க முடியாத பட்சத்தில் தமது வழக்கு விசாரணைகளை யாழ்ப்பாணத்திற்கு மாற்றுமாறும் அவர் கேட்டுள்ளார்.

சாட்சி கவலையடைந்துள்ளார்; கலக்கமடைந்துள்ளார்; அவரது உயிருக்கு ஆபத்து ஏற்படும் பட்சத்தில் இருக்கின்ற சிறுதடயமும் அகற்றப்பட்டு விடும் என அவர் அஞ்சுகிறார் என மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் ஒருங்கிணைப்பாளர் ருவான் சந்திரசேகர தெரிவித்துள்ளார்.

அத்துடன் விசாரணைகள் 29ஆம் திகதி நடைபெறுவதற்கான சாத்தியக்கூறுகள் குறைவாக உள்ளதாகவும் பாதுகாப்பு ஒழுங்குகளை பூர்த்தி செய்யமுடியாமல் உள்ளதாலேயே இந்நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

# பொ.ஐ.மு.வின் அபிவிருத்தித் திட்டங்கள் அனைத்தும் கைவிடப்பட்டுவிட்டன!

## – சனாதிபதி சந்திரிகா குற்றச்சாட்டு

(கொழும்பு)

பொதுசன ஐக்கிய முன்னணி ஆட்சியில் இருந்த போது ஆரம்பிக்கப்பட்ட அபிவிருத்தி நடவடிக்கைகள் அனைத்தும் தற்போது கைவிடப்பட்டுள்ளது என சனாதிபதி சந்திரிகா தெரிவித்துள்ளார்.

இந்தத் திட்டங்களை முன்னெடுப்பதற்குத் தேவையான நிதி அரசாங்கத்திடம் உள்ள போதிலும் அது நடைமுறைப்படுத்தப்படவில்லை என அவர் கூறுகின்றார்.

அக்குரசையில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட வர்களுக்கு உதவிகளை வழங்கும் முகமாக நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்விலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

# அபிவிருத்தி லொத்தர் சபை சர்ச்சைக்கு நீதிமன்றமே இறுதித்தீர்ப்பளிக்க வேண்டும்

## பொ.ஐ.முன்னணி வலியுறுத்து

(கொழும்பு)

அபிவிருத்தி லொத்தர் சபை தொடர்பான சர்ச்சைக்கு நீதிமன்றமே இறுதித்தீர்ப்பை வழங்க வேண்டும் என பொ. ஐ. முன்னணியின் பேச்சாளர் சரத்அமுனுகம தெரிவித்துள்ளார்.

இதுவே அரசின் அமைப்பு ரீதியாக ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்வு என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை அபிவிருத்தி லொத்தர் சபை அமைச்சர் மிலிந்த மொறகொடவின் கீழ் இருப்பதாக சபாநாயகர் ஜோசப் மைக்கல் பெரேரா கடந்த வியாழக்கிழமை பாராளு மன்றத்தில் தெரிவித்தது தொடர்பாகவே பொ.ஐ. முன்னணியின் பேச்சாளர் இதனைத் தெரிவித்துள்ளார்.

சபாநாயகர் தமது கருத்தைக் கூறமுடியும் ஆனால் அபிவிருத்தி லொத்தர் சபை சர்ச்சை தொடர்பாக நீதிமன்றத்தின் தீர்ப்பு கிடைக்கும் வரை பொறுத்திருக்க வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

# கூட்டணியின் இரு பிரதான பதவிகளில் ஒன்றை ஜே.வி.பி.க்கு வழங்க இணக்கம்

## இன்றும் பேச்சுக்கள் நடைபெறுகின்றன

(கொழும்பு)

ஸ்ரீ.ல.சு.கட்சியினதும் ஜே.வி.பியினதும் கூட்டணி அமைப்பில் பிரதான இருபதவிகளில் ஒன்றை ஜே.வி.பி.க்கு வழங்க இணக்கம் காணப்பட்டுள்ளதாக இரண்டு கட்சிகளின் வட்டாரங்கள் மூலம் தெரியவருகிறது.

இதைவிட கடந்த 22ஆம் திகதி நடைபெற்ற பேச்சுக்களின்போது பொருளாதாரம் தொடர்பான இரு விடயங்களில் இணக்கம் காணப்பட்டுள்ளதாகவும் மேலும் இணக்கம் காணப்படாத இரு விடயங்கள் பற்றி இன்று பேச்சு நடைபெறும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

கூட்டணியில் பதவிகள் பகிர்ந்தளிக்கப்படுதல் பற்றியும் இனப்பிரச்சினைத் தீர்வில் கூட்டணியின் பங்கு பற்றியும் இன்று நடைபெறும் பேச்சுக்களில் ஆராயப்படும் எனவும் கூறப்படுகிறது. இப்பேச்சுக்களில் ஸ்ரீ.ல.சு.கட்சி சார்பில் சனாதிபதி சந்திரிகாவும், செயலாளர் மைத்திரிபால சிறிசேனாவும் பங்கு பற்றுகின்றனர்.

ஜே.வி.பி.சார்பில் அதன் செயலாளர் டில்வின் சில்வா, பிரசார செயலரும் பாராளுமன்றக்குழு தலைவருமான விமல் வீரவன்ச, அனுர குமார திசாநாயக்க ஆகியோர் பங்குபற்றுவர்.

# பிந்துனுவெவ வர்த்தகர் வீட்டில் 60 எம்.எம்.மோட்டார் மீட்பு!

(கொழும்பு)

பிந்துனுவெவ என்ற இடத்தில் வீடொன்றைச் சுற்றிவளைத்த பொலிசார் அங்கிருந்து 60 மி.மீ.மோட்டார் ஒன்றை கண்டுபிடித்துள் ளனர். இது தொடர்பாக அப்பகுதி வியாபாரி ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார். விசாரணைகளின்போது அவர் யாழ்ப்பாணத்துக்கு சுற்றுலா ஒன்றில் சென்றிருந்த போது நிலத்தில் கிடந்து எடுத்துவைத்திருப்பதாக அவர் கூறியிருக்கிறார். எனினும் அவர் இதனை அங்கு எடுத்துச் சென்றதற்கான காரணத்தையும் இது பற்றி பொலிசாரிடம் முறையிடாதது பற்றிய காரணத்தையும் வெளியிடவில்லை என குற்றம் சாட்டப்பட்டுள்ளார். ஊவா மாகாண உதவி பொலிஸ்மா அதிபருக்கு கிடைத்த தகவலையடுத்து பொலிசார் மேற்கொண்ட தேடுதலில் மேற்படி மோட்டார் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

# சிறப்பான துடுப்பாட்டம்

அவுஸ்திரெலியாவுக்கெதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் பங்களாதேஷ் அணி குறிப்பிடத்தக்க வகையில் தனது முதல் இனிங்சில் விளையாடியிருக்கிறது.

நேற்று முன்தினம் அவுஸ்திரேலியா கெய்ன்ஸ் நகரில் நடைபெற்ற போட்டியில் பங்களாதேஷ் அணி தனது முதலாவது இனிங்சில் 8 விக்கெட் இழப்பிற்கு 289 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. அவ்வணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரரான ஹனான்சர்கார் 76 ஓட்டங்களையும் ஹபிபுல் பஷாரும் சன்வார் ஹொசைனும் தலா 46 ஓட்டங்களை பெற்றனர். பங்களாதேஷ் அணி ஒரு கட்டத்தில் ஒரு விக்கெட்டை மட்டும் இழந்து 155 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. அடுத்து வந்த வீரர்களும் சிறப்பாக விளையாடி 8 விக்கெட் இழப்பிற்கு 289 ஓட்டங்களைப் பெற்றது.




# பங்கேற்பது சந்தேகமே!

எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் இந்தியாவில் நடைபெறவுள்ள டெஸ்ட் மற்றும் ஒருநாள் கிரிக்கெட் போட்டிகளில் நியூசிலாந்து வீரர்கள் நேதன் ஆஸ்லே, ஷேன் பொண்ட் இருவரும் பங்குபற்றுவது சந்தேகத்திற்குள்ளாகியிருப்பதாக தெரியவருகின்றது. அண்மையில் இவர்களிருவரும் காயம் காரணமாக ஓய்விலிருந்து தேறி வருகின்றனர். ஆஸ்லே கடுமையான பயிற்சிகளில் ஈடுபட்டாலும், சர்வதேச கிரிக்கெட்டுக்கு அவர்கள் திரும்புவது அறுதியாகக் கூறமுடியாதுள்ளதாக பயிற்றுனர் ஆஸ்வே ரோஸ் கூறுகிறார்.

நியூசிலாந்து அணி செப்ரெம்பர் 23இல் இந்தியாவிற்கு வருகை தந்து அங்கு தற்போதைய உலக சம்பியன் அவுஸ்திரேலியாவும் பங்குகொள்ளும் முத்தரப்புப் போட்டிகளிலும் கலந்து கொள்ளவுள்ளது.

# மாவீரர் வெற்றிக் கிண்ணத்திற்காக ஜேர்மனியில் விளையாட்டுப் போட்டிகள்

ஜேர்மனியில் மாவீரர் வெற்றிக் கிண்ணத்திற்கான விளையாட்டுப்போட்டி மாணவர்களுக்கிடையில் நேற்று இடம்பெற்றது.

ஒபகவுஸ் என்னுமிடத்தில் நடந்த இந்த விளையாட்டுப் போட்டி நேற்றுக்காலை தமிழீழ தேசியக் கொடியேற்றலுடன் அணிவகுப்பு நடைபெற்றது. இதனையடுத்து மெய்வல்லுநர் போட்டிகள் நடைபெற்றன.

500இற்கும் மேற்பட்ட மாணவர்கள் இதில் கலந்துகொண்டனர். ஏற்கனவே உதைபந்தாட்டம், கிரிக்கெட், கரப்பந்தாட்டம், நீச்சல் போட்டிகள் நடைபெற்றுள்ளன.

ஜேர்மனி தமிழ் மாணவர் அமைப்பின் ஏற்பாட்டில் இந்த விளையாட்டுப்போட்டி நடைபெற்றது.

## குளவி கொட்டியதால் பெண் மருத்துவமனையில்

(ஒட்டுசுட்டான்)

முத்துஜயன்கட்டு ஒட்டுசுட்டான் வீதியில்நேற்றுக்காலை பெண்மணி ஒருவருக்குக் குளவி கொட்டியதில் அவர் புதுக்குடியிருப்பு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

காலை ஆறு மணியளவில் உந்துருளியில் தொட்டியடியிலிருந்து ஒட்டுசுட்டான் நோக்கி வந்த பெண்மணியே குளவியினால் கொட்டப்பட்டு மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டார். இவ் வீதியால் சிறுவர்கள் பாடசாலை மாணவர் நடந்து செல்கின்றமையும் குறிப்பிடத்தக்கது. (05)

## பிரிட்டன், பிரான்சில் தமிழர் விளையாட்டு விழா

(லண்டன்)

பிரித்தானியாவிலும், பிரான்சிலும் இன்று தமிழர் விளையாட்டு விழா இடம்பெறுகிறது.

பிரித்தானியாவில் பிரித்தானியத் தமிழர் ஒன்றியத்தினரால் எட்டாவது தடவையாக இந்த விளையாட்டு விழா நடைபெறுகிறது.பிரான்ஸ்-பாரிசில் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் ஏற்பாட்டில் இந்த விளையாட்டு விழா நடைபெறுகிறது.

தமிழீழ தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பொறுப்பாளர் கே.பி.றெஜியும், சிறையிலுள்ள தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ. நெடுமாறனும் வாழ்த்துச் செய்தியை அனுப்பிவைத்துள்ளனர்.

ஏற்கனவே பல போட்டிகள் நடைபெற்றுள்ளன இன்று இறுதிப் போட்டிகள் நடைபெறவுள்ளன.

-புதுவை இரத்தினதுரை எழுதிய-

## வியாசனின் உலைக்களம் முதல் பாகம் வெளிவருகிறது

கவிஞர் புதுவை இரத்தினதுரை வியாசன் என்ற மறுநாமத்தில் உலைக்களம் என்ற மகுடத்தில் கடந்தபன்னிரண்டு வருடங்களாக விடுதலைப்புலிகள் ஏட்டில் எழுதிவரும் உணர்வின் வரிகளின் தொகுப்பு "வியாசனின் உலைக்களம்" என்று முழுவதுமாகத் தொகுக்கப்பட்டு எதிர்வரும் 01.08.2003 வெள்ளி பிற்பகல் நான்கு மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் வெளியிடப்படுகிறது.

இருநூற்று எழுபத்தைந்து பக்கங்களைக்கொண்டு வெகு நேர்த்தியாக வடிவமைக்கப்பட்ட இந்நூலுக்கான முன்னுரையை அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனும் மதிப்புரையைப் புலனாய்வுத்துறைப் பொறுப்பாளர் ச.பொட்டுவும் எழுதியுள்ளனர். யாழ். மாவட்ட அரசியல்துறைப்பொறுப்பாளர் சி. இளம்பரிதி தலைமையில் நடைபெறும் வெளியீட்டு விழாவில் வெளிச்சம் ஆசிரியர் சி. கருணாகரன், அரசியல் ஆய்வாளர் மு. திருநாவுக்கரசு, எழுத்தாளர் ஐ.சாந்தன், பேராசிரியர் அ.சண்முகதாஸ் உட்பட இன்னும் பலர் உரையாற்றவுள்ளனர். அரசியல்துறைதுணைப்பொறுப்பாளர் சோ. தங்கன் நூலை வெளியிட்டு வைப்பார். சிறப்புப் பிரதிகளை யாழ். பல்கலைக்கழக உபவேந்தர் மோகனதாஸ் வழங்கிக் கௌரவிப்பார். விபரமான விழாச்செய்திகள் பின்னர் வெளியிடப்படும் என விடுதலைப்புலிகள் கலை, பண்பாட்டுக்கழகத்தின் செய்திக்குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## ஜூலை இனக்கலவரத்திற்காக சனாதிபதி பகிரங்க மன்னிப்புக் கோர ஆராய்வு

1983 ஆம் ஆண்டு நாட்டில் நடைபெற்ற இனக்கலவரத்திற்காக பகிரங்க மன்னிப்புக் கோருவது குறித்து சனாதிபதி ஆராய்ந்து வருகிறார்.

நாட்டின் தலைவர் மன்னிப்புக் கோருவது என்பது தீவிரமாக ஆராயவேண்டியவிடயம் என சனாதிபதியின் ஆலோசகரும், முன்னாள் வெளிவிவகார அமைச்சருமான லக்ஷ்மன் கதிர்காமர் கேள்வியொன்றுக்கு பதிலளிக்கையில் தெரிவித்துள்ளார்.1983 ஆம் ஆண்டு நடைபெற்ற இனக்கலவரத்திற்கு ஐ.தே.கட்சியே பொறுப்பேற்க வேண்டும். அந்தப் பொறுப்பிலிருந்து விலகிச் செல்ல முடியாது.

பாப்பரசர் கூட அண்மையில் நடந்த சம்பவங்களுக்காக பகிரங்கமாகமன்னிப்புக்கோரினார். சனாதிபதி நியமித்த உண்மையைக் கண்டறியும் அறிக்கை இன்னும் வெளியிடப்படவில்லை. அவர் கூறியுள்ள உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு 1983 ஆம் ஆண்டு நடைபெற்ற இனக் கலவரத்திற்காக அரசியல் தலைவர்கள் பகிரங்கமாக மன்னிப்புக்கோர வேண்டுமென சிபார்சு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## இந்தியா- இலங்கைக்கிடையே பாலம் அமைக்க வை.கோ. எதிர்ப்பு

-சேதுசமுத்திரத்திட்டம் பாதிக்கப்படும் என தெரிவிப்பு

(சென்னை)

தலைமன்னாருக்கும் இராமேஸ்வரத்திற்குமிடையில் பாலம் அமைக்கும் சிறிலங்கா அரசின் யோசனைக்கு மறுமலர்ச்சி திராவிடமுன்னேற்றக்கழக பொதுச் செயலர் வை.கோ. கண்டனம் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் பொடோ நீதிமன்றத்திற்கு குற்றச்சாட்டுக்கள் பதிவு செய்யப்பட்ட போது அங்கு வந்திருந்த வை. கோ.தலைமன்னார்- இராமேஸ்வரத்திற்கிடையில் பாலம் கட்டக் கூடாது என்றும் இப்பாலம் அமைக்கப்பட்டால் சேது சமுத்திரக் கால்வாய்த் திட்டம் பாதிக்கப்படும் என்றும் கூறியுள்ளார்.

இப்பாலம் கட்டக்கூடாது என்று பிரதமர் வாஜ்பாயிற்கு வை.கோ. ஏற்கனவே கடிதம் ஒன்றையும் அனுப்பிவைத்துள்ளார்.

இதேவேளை,சேது சமுத்திரக்கால்வாய்த்திட்டத்தை சிறிலங்கா அரசு எதிர்த்து வருவது தெரிந்ததே.

## அமைச்சர் திசநாயக்காவை மீண்டும் பொ.ஐ.மு.வில் சேர்க்க முயற்சி

(கொழும்பு)

அமைச்சர் எஸ்.பி.திசநாயக்காவை மீண்டும் பொ.ஐ.முன்னணியில் சேர்த்துக் கொள்வதற்கு அக்கட்சி முயற்சிகளை மேற்கொண்டுள்ளது.

இதன் ஒருகட்டமாக சனாதிபதியின் தூதுவர்களாக முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீர மற்றும் மாகாணசபை அமைச்சர் லசந்த அழகேன ஆகியோர் அமைச்சர் திசநாக்காவைச் சந்தித்து உரையாடியுள்ளனர்.

இச்சந்திப்பின் போது அமைச்சர் திசநாயக்க அண்மையில் திறைசேரியின் செயலாளருடன் கருத்து முரண்பட்ட சம்பவத்தை சனாதிபதியின் தூதுவர்கள் பெரிது படுத்தி ஐ.தே. முன்னணியை விட்டு வெளியேறுமாறு கோரியுள்ளனர்.

ஐ.தே. முன்னணியுடன் முரண்பாடுகள் இருந்தாலும் சனாதிபதியின் கீழ் ஒரு போதும் பணியாற்றப் போவதில்லையென அமைச்சர் திசநாயக்கா அவர்களிடம் கூறியுள்ளார்.

## திருமலையில் அனல் மின்நிலையம் நிறுவ அமைச்சரவை அனுமதி

(திருகோணமலை)

திருகோணமலை மாவட்டத்தில் அனல்மின் நிலையம் ஒன்றை நிறுவுவதற்கான அனுமதியை சிறிலங்காவின் அமைச்சரவை வழங்கியுள்ளது.

தனியார் துறையினரால் இந்த மின் நிலையம் நிறுவப்படவுள்ளதாக மின்சக்தி எரிபொருள் அமைச்சர் கருஜெயசூரிய தெரிவித்துள்ளார்.

அனல்மின் நிலையத்தை அமைப்பது தொடர்பான அமைச்சரவைப் பத்திரத்தை அமைச்சர் கருஜெயசூரிய அமைச்சரவையில் சமர்ப்பித்திருந்தார்.

இதேவேளை திருகோணமலையில் அனல்மின் நிலையத்தை அமைப்பதற்கெதிராக பொது அமைப்புக்கள் குரல்கொடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## ஜேர்மனியில் கொலை செய்யப்பட்ட இலங்கைத் தமிழர் குறித்து தகவல் வழங்கக் கோரிக்கை

ஜேர்மனியில் படுகொலை செய்யப்பட்ட இலங்கைத் தமிழரான யோகநாதன் கந்தையா என்பவரது மரணம் தொடர்பான தகவல்களைத் தந்துதவுமாறு ஜேர்மனி பொலிசார் மக்களைக் கேட்டுள்ளனர்.

கடந்த ஏப்ரல் மாதம் 12ஆம் திகதி காணாமல்போன இவரின் சடலம் ஜேர்மனியின் டியூபேக் நகரின் ஆற்றங்கரையில் இம்மாதம் 2 ஆம் திகதி கண்டுபிடிக்கப்பட்டது.

இவரது மரணத்தைப் படுகொலை என கூறும் டியூபேக் நகர புலனாய்வுத் துறையினர் இது தொடர்பான விபரங்களைத் தந்துதவுமாறு பொதுமக்களைக் கேட்டுள்ளனர். விபரம் தெரிந்தவர்கள் தமது பெயரைக் குறிப்பிடாமல் தமிழிலும் தகவல்களை வழங்க முடியும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. தகவல் கொடுப்பவர்களுக்கு1500 யூரோ சன்மானம் வழங்கப்படும் என்றும் பொலிசார் அறிவித்துள்ளனர்.

### மட்டக்களப்பு...

செய்யப்பட்டதோடு வாகனமும் பொலிஸ் நிலையத்தில் விடப்பட்டதாகஏறவூர் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

இதனையடுத்து இருவிடுதலைப் புலிகளும் பொலிசாரால் நீதிமன்றத்தில் முன்நிறுத்தப்பட்டு பின்னர் நேற்று பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர் என மட்டக்களப்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

சதாம் அமீர்தலிங்கம், கிருஸ்ணபிள்ளை மதியழகன் ஆகியோரே கைது செய்யப்பட்டு பிணையில் விடுதலை செய்யப் பட்டுள்ளவர்களாவர்.

இவர்கள் இருவரும் 8ஆம் திகதி நீதிமன்றில் ஆஜராக வேண்டும் என்றும் 8ஆம் திகதிவரை வாகனத்தை பொலிஸ் காவலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

### புலத்திலிருந்து...

தனது தேசத்தை நினைந்து பாடிய பத்துக்கு மேற்பட்ட பாடல்கள் அடங்கிய இசைத்தட்டேநேற்று செஞ்சோலையில் வைத்து வெளியிடப்பட்டது.

மேற்படி நிகழ்வில் விடுதலைப் புலிகளின் வடபோர்முனைத் தளபதி கேணல் தீபன் சுடர் ஏற்றிவைத்ததைத் தொடர்ந்து செஞ்சோலை மாணவிகளால் தமிழ்த்தாய் வாழ்த்து மற்றும் மாவீரர் நினைவுப்பாடல் என்பன பாடப்பட்டன.

கலைபண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் இசைப்பாடல்களுக்கான அறிமுக உரையை வெளிச்சம் சஞ்சிகை ஆசிரியர் கருணாகரன் நிகழ்த்தினார் இசைப்பாடல்களுக்கான மதிப்பீட்டு உரையை போராளி எழுத்தாளர் மலைமகள் நிகழ்த்தினார். அதனைத் தொடர்ந்து பாடல்களுக்கான கருத்துரையை விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர் க.வே. பாலகுமாரன் நிகழ்த்தினார்.

தொடர்ந்து நேற்று வெளியிட வைக்கப்பட்ட இசைத்தட்டின் பாடல்களைச் சிறப்பான முறையில் பாடிய செல்வி. அர்ச்சனாவிற்கு செஞ்சோலைப் பொறுப்பாளர் ஜெனனி வாழ்த்துத் தெரிவித்தார். செஞ்சோலை மாணவிகளால் அர்ச்சனாவிற்கு நினைவுப் பரிசு ஒன்றும் வழங்கப்பட்டது.

இவ்வாறு நடைபெற்றநிகழ்வில் வெளியிடப்பட்ட இசைத் தட்டை தமிழீழ அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் வெளியிட்டுவைக்க தமிழீழகல்விக்கழகப் பொறுப்பாளர் வெ. இளங்குமரன் பெற்றுக்கொண்டார்.

இவ்வாறு உருவாக்கப்பட்ட இசைத்தட்டுக்கான பாடல்களை கவிஞர் நாவண்ணன், பொன.கோணேஸ் கிருஸ்ணலிங்கம், சிவதாஸ் (சோதி) தமிழரசன் ஆகியோர் இயற்றியிருந்தனர்.

மேற்படி வெளியீட்டுவிழாவில் விடுதலைப்புலிகளின் தளபதிகள், பொறுப்பாளர்கள், போராளிகள், எழுத்தாளர்கள், ஆர்வலர்கள் செஞ்சோலைமாணவிகள் உட்பட ஏராளமானவர்கள் கலந்து கொண்டனர். (லோ)

### படைமுகாமுள்ள...

துச் செல்லப்பட்டு புதிய புதிய காவலரண்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

இதனால் தங்களது வளங்கள் அழிக்கப்படுவதாக தென்மராட்சிப் பகுதி மக்கள் மிகவும் கவலையடைந்துள்ளார்கள். (33)

### யாழ். பல்கலை...

எதிர்காலத்தில் இத்துறையைத் தனிப்பீடமாகத் தரமுயர்த்தும் முயற்சிகளில் தாம் ஈடுபடுவதாகவும் வாக்குறுதியளித்தார்கள்.

இதனையடுத்து அவர்களை வெளியே செல்ல மாணவர்கள் அனுமதித்தார்கள். ஆனாலும் இத்தீர்மானம் தொடர்பாக எழுத்து மூலமான ஒருஅறிக்கைதமக்குக் கிடைக்கும் வரையும் பகிஷ்கரிப்புப் போராட்டத்தைத் தொடர்ந்து நடத்தப் போவதாகக் கூறியுள்ளார்கள். (33-27)

### திருமலை நகரில்....

என்று அதனை ஒழுங்கு செய்த அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர். தனியார் கல்வி நிலையங்களும் பிரத்தியேகவகுப்புகளும் நடைபெறவில்லை.

இக் கதவடைப்பு காரணமாக காணியமைச்சர் ராஜித சேனாரத்தின தமது திருமலை விஜயத்தை ரத்துச் செய்துள்ளார். இதனால் திருமலை மாவட்டத்தில் 26ஆம் திகதி தொடக்கம் நான்கு தினங்களுக்கு இடம் பெறவிருந்த காணி அமைச்சின் நடமாடும் சேவையும் ரத்துச்செய்யப் பட்டுள்ளது. (25)

## இந்திய அமைச்சர் வருகை

தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்பரப்பில் மீன் பிடிக்க அனுமதிக்க வேண்டும் என்ற தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவின் திட்டம் குறித்து பேச்சுவார்த்தை நடாத்துவதற்காக இந்திய அமைச்சர் ஜஸ்வந்சிங்கா அடுத்த மாதம் இலங்கைக்கு வரவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

ஐந்து கடல்மைல் தூரம் வரை இவர்களை மீன்பிடிக்க வேண்டுமென ஜெயலலிதா கோரியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### தப்பியோடி..

தாகத் தெரிவித்துள்ளார். கிளாலி கடற்படைத் தளத்தில் சக படையினரால் தான் அடித்துத் துன்புறுத்தப்பட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.இதனாலேயே அவர்தப்பி வந்துள்ளதாகவும் கூறினார்.

விடுதலைப் புலிகளால் யாழ்ப்பாணத்தில் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினிடம் ஒப்படைக்கப்பட்ட இவரை கண்காணிப்புக் குழுவினர் ஊர்காவற்துறைக் கடற்படைத்தளபதி ரத்னாயக்காவிடம் கையளித்துள்ளார்கள். யாழ்.மாவட்ட மனிதவுரிமை ஆணைக்குழுவினரும் இந்தச் சம்பவத்தில் பிரசன்னமாகி இருந்தார்கள். (33)-(27)

### விமானத்...

ளும் 1991ஆம் ஆண்டு சிறிலங்கா அரசின் சுதந்திரக் கொண்டாட்டத் தினத்தன்று வான் படையினரின் மிலேச்சத்தனமான குண்டு வீச்சில் உடல் சிதறி பலியானவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (சோ)

## சாவு அறிவித்தல்

இராமையா-சிட்டுப்பிள்ளை

கிருஸ்ணபுரத்தை நிரந்தர வதிவிடமாகக் கொண்ட அமரர் மார் இராமையாவின் அன்பு மனைவி இராமையா சிட்டுப்பிள்ளை 26-07-2003 சனிக்கிழமை காலமானார். அன்னார் திரு.இ.இரத்தினமணி (தலைவர் கி.அ.சங்கம் கிருஸ்ணபுரம்) திருமதி ச. தவமணி, திருமதி.ஏ.பாலாமணி, திரு.இ.சிங்காரா, திருமதி. ரெ.ருக்மணி, திருமதி.மு.சிந்தாமணி, திரு.இ.மயில்வாகனம், செல்வி.இ.செல்வம் ஆகியோரின் அருமை தாயாரும், திருமதி இ.சுகமணி திரு.மு.சண்முகம், திரு.நா.ஏகாம்பரம், திருமதி சி.ஜெகதீஸ்வரி, திரு.மு.ரெங்கையா, திரு.ச.முனிஸ்வரன், திருமதி.ம.விஜயராணி ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார். அன்னாரின் பூதவுடல் 27-07-2003 ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு கிருஸ்ணபுரம் பொது மயானத்தில் தகனம் செய்யப்படும் என்பதனை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகிறேன்.

தகவல்:-
இ.இரத்தினமணி
கிருஸ்ணபுரம், கிளிநொச்சி.

(2294)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ம் ஆண்டு ஜூலை மாதம் 27ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.